# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 11 வெள்ளிக்கிழமை ( 24 - 03 - 2000 ) VALAMPURI ஒலி: 96


★ தடைகள் ★ ஒடுக்குமுறைகள் ★ பொருளாதார நெருக்குதல்கள்

# இவற்றை அரசாங்கம் நீக்குமானால்

# பேச்சுக்கு விடுதலைப்புலிகள் தயார்!

## அன்ரன் பாலசிங்கம் பேட்டி

(இலண்டன்)

பல்வேறு தடைகளையும் கட்டுப்பாடுகளையும் சமூகபொருளாதார ஒடுக்கு முறைகளையும் சந்திரிகா அரசு அகற்றினால் போர்நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராகவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும் கடந்த 10 வருட காலமாக எமது மக்கள் மீது திணித்துவரும், தடைகளும் கட்டுப்பாடுகளும் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தியதோடு தமிழர்களின் சமூக பொருளாதார கலாச்சாரங்களையும் ஆழமாகச் சிரழித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன்பாலசிங்கம் இலண்டனிலிருந்து வெளியாகும் பிரபல ஏடான ''தமிழ்க் கார்டியனுக்கு'' அளித்த பேட்டியில் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் சிறுநீரக சத்திரசிகிச்சையை முடித்து குணமடைந்து வரும் அன்ரன்பாலசிங்கம் இலண்டன் வந்த பின்னர் தமிழ்க் கார்டியன் பத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

சமாதானப் பேரணி மூலம்

## எமது கோரிக்கைகளை அரசுக்கு புலப்படுத்த நாம் அணிதிரள்வோம்

### கடற்றொழிலாளர் சமாசம் அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தினை உடன் நிறுத்தி தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வை முன்கொண்டுவர மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சு வார்த்தை நடைபெற வேண்டும் என ஏகோபித்த எமது மக்களின் கோரிக்கையாக அரசுக்குத் தெரிவிக்க அனைவரும்அணிதிரள்வோம்

இவ்வாறு நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளசமாதானப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்துவடமாகாணகடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

(8ஆம் பக்கம் பார்க்க)

மாம்பழஞ் சந்தியில் மோதல்

## இடையில் சிக்கிய பல்கலை மாணவனும் படைத்தரப்பில் ஒருவரும் மரணம்

(யாழ்ப்பாணம்)

மாம்பழசஞ்சந்தி கனகரட்ணம் வீதியில் நேற்று மாலை சைக்கிளில் சென்ற இராணுவத்தினர் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலில் படைத்தரப்பில் ஒருவர் ஸ்தலத்தில் பலியானார்.

இத்தாக்குதல் சம்பவத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழியில் "ஷெல்" தாக்குதல் இருவர் படுகாயமடைந்தனர்.

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி சந்திப்பகுதியில் நேற்றுமாலை 6மணியளவில் ஷெல் வீழ்ந்து வெடித்ததில் இருவர் படுகாயமடைந்தனர் யாழ். போதனாவைத்திய சாலையில் கடமையாற்றும் ஐயன் சுந்தசாமி (வயது45) வேலைமுடிந்து வீடுதிரும்பும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டுக்கு வயோதிபர் படுகாயம்; அறுகுவெளியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தனங்களப்பு அறுகுவெளியில் வயல்வேலை செய்து கொண்டிருந்த வயோதிபரின் தலைமீது துப்பாக்கிச் சன்னம் பட்டதில் படுகாயமடைந்த அவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஆபத்தான நிலை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மரத்தால் விழுந்த மாணவன் பலி!

(நீராவியடி)

பலாமரத்தில் ஏறிய மாணவன் ஒருவன் தவறிக் கீழே விழுந்து மரணமான பரிதாபச் சம்பளம் ஒன்று நேற்று நக்காவிதிஜோன் பொஸ்கோவித்தியாலயத்திற்கு அண்மித்த வீட்டில் இடம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் கால் இழப்பு

(வவுனியா)

மடு பாலம்பிட்டி என்னும் இடத்தில் மிதிவெடியில் சிக்கி ஜெகன் (வயது 14) என்பவர் தனது வலது காலை இழந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

காரைநகர் அம்மன் ஆலய விடயம்

## வடபகுதி கடற்படைத் தளபதிக்கு திரிலோகன் அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணற்காடு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு அதன் இரண்டாந் திருவிழாவாகிய நேற்றைய தினம் மாலை ஆலயத்திற்குச்சென்ற அடியார்களையும் நாதஸ்வரக்குழுவினரையும் கடற்

[8 ஆம்பக்கம் பார்க்க]

## கத்தியுடன் விளையாடிய பாலகன் கத்தி வெட்டில் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

கத்தியுடன் விளையாடிய 6 வயதுப் பாலகன் அதே கத்திவெட்டிற்கு இலக்காகி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாளைய சமாதானப் பேரணிக்கு போக்கு வரத்து ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

நாளைநடைபெறவிருக்கும் குடாநாடுதழுவிய மாபெரும் சமாதானப் பேரணிக்கு குடாநாட்டின் சகல பாகங்களிலும் இருந்தும் பேராதரவு இருந்தவண்ண மிருப்பதுடன் பேரணிக்கு மக்கள் தயாராகி வருகிறார்கள்.

[8ஆம் பக்கம் பார்க்க]

## சமாதானப் பேரணிக்கு தென்இலங்கையில் ஆதரவு!

நாளை நடைபெறவிருக்கும் சமாதானப் பேரணிக்கு ஆதரவாக சர்வோதய இயக்கத்தலைவர் கலாநிதி ஆரியரத்தினா தலைமையில் விகாரமாதேவி பூங்காவில் விசேட பிரார்த்தனை நடைபெறவுள்ளது.

இதே வேளை அருட்தந்தை திஸ்ஸபால சூரியாவும் தங்களது அமைப்புச் சார்பாக சமாதானப் பேரணிக்கு ஆதரவும்,ஆசியும் தெரிவித்துள்ளனர். (வ)

## இருவர் கொலையுண்ட சம்பவம் தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கு புகார்

(மட்டக்களப்பு)

விசேட அதிரடிப்படையினரால் கடந்த வியாழக்கிழமை இருவர் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா தொல்லை தவிர்ப்புக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

இச் சம்பவத்தில் கொல்லப்பட்ட வெல்லாவெளி வா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிளின்டன் இலங்கைக்கும் விஜயம் செய்திருந்தால் நம்மதிப்புக் கூடியிருக்கும்

### ஐ.தே.க.எம்.பி. கருத்து

(கொழும்பு)

''அமெரிக்க ஜனாதிபதி கிளிங்டன் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு வருகைதந்து 6 மணித்தியாலங்கள் தங்கியிருந்தால் ஜனாதிபதி சந்திரிகா அவரை வரவேற்றிருந்தால் இலங்கையின் மதிப்பும் செல்வாக்கும் உலகளாவிய ரீதியில் மிக உயர்ந்திருக்கும்.

இவ்வாறு [illegible] புத்தளம் மாவட்ட ஐ.தே.க. எம்.பி.

(8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழர் நிலங்களில் குடியேற்றம்
# திருமலையில் திரைமறைவு முயற்சி

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத் தமிழர் கிராமங்களில் சிங்கள மக்களைக் குடியேற்ற முயற்சிகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்தக்கெடுபிடிகள், வன்செயல்கள் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் இம்மாவட்டத்திலுள்ள தமிழர்களின் வாழ்விடங்களில் சிங்களவர்களைக் குடியேற்ற சில அரசியல் சக்திகள் எடுத்து வரும் திரை மறைவு முயற்சிகளை தமிழ் அரசியல் கட்சித்தலைவர்கள் பலரும் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

தமிழ்மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த எல்லைப்புற தமிழ்க் கிராமங்களை சிங்கள மயமாக்குவதை நோக்கமாகக் கொண்டே இத்தகைய முயற்சிகளில் சில உள்ளூர் அரசியல் வாதிகள் ஈடுபடுகிறார்கள். இதனை நாம் அனுமதிக்கப் போவதில்லை என அவர்கள் கூறியுள்ளனர்.

தமிழ் மீனவர்களின் கிராமங்களும் விவசாயப்பகுதிகளுமே சிங்கள மக்களின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## கட்புலசாதன போட்டியும் கண்காட்சியும்

(அரியாலை)

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் ஆசிரியர்களுக்கான வரலாறும் சமூகக்கல்வியும் பாடத்திற்கான கட்புலசாதனப் போட்டியும் கண்காட்சியும்' இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

[செ-106]

## இந்து சமயப்பேரவை வேண்டுகோள்

சனிக்கிழமை யாழ். நகரில் நடாத்தப்படவுள்ள சமாதானப் பேரணிக்கு யாழ். இந்து சமயப் பேரவையும் தமது மனப்பூர்வமான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

எமது நாட்டில் கடந்த காலங்களில் நடைபெற்ற போரால் அப்பாவிப் பொது மக்கள் கொலைசெய்யப்பட்டும், அங்கவீனர்கள் ஆக்கப்பட்டும், அனாதைகளாக்கப்பட்டும், பெண்கள் விதவைகளாக்கப்பட்டும் உள்ளார்கள். குறிப்பாக எமது இந்து ஆலயங்கள் பல அழிக்கப்பட்டுள்ளன. இதனால் எமது மதம் இந்த நாட்டில் அழிந்துவிடுமோ என்று எண்ண வேண்டிய அவல நிலையில் நாம் வாழ வேண்டியுள்ளோம்.

இக்கொடிய யுத்தத்தை நிறுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடாத்தி சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு தமது மனப்பூர்வமான முழு ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். என்று இப்பேரவைச் செயலாளர் திரு. சி. சக்திகிரீவன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார். (சி)

## நல்லூர் வணிகர் கழகம் ஆதரவு

[யாழ்ப்பாணம்]

நாளை 25-ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலில் ஆரம்பமாகும் எமது சமாதானப் பேரணியை நாங்கள் முன்னெடுப்பதால்; எங்கள் நல்லூர் வணிகர் கழகத்திற்குட்பட்ட சகல வர்த்தக ஸ்தாபனங்களும் இச்சமாதானப் பேரணியில் கலந்து கொள்ளும் முகமாக தமது வர்த்தக நிலையங்களை பூட்டுவதுடன் பேரணியிலும் கலந்து கொள்ளவும்.

எனவே எமது நிலைப்பாட்டை தென் மாகாண மக்களுக்கும்; வெளிநாடுகளுக்கும் தெரியப்படுத்துவது எமது தார்மீகக் கடமை என்பதால் சமாதானத்திற்கும் நல் எண்ணத்துக்குமான மக்கள் குழுவினால் எமக்கு அறிவிக்கப்பட்ட நான்கு அம்சக் கோரிக்கையை முன் வைத்து நடாத்தப்படும் சமாதானத்திற்கான பேரணியில் அனைவரும் கலந்து கொள்வது மிக அவசியமானது என்பதனையும் தெரிவிக்கின்றோம்.

இவ்வாறு அவ்வேண்டுகோள் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## தொடரும் திருப்பணி வேலைகள்

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் தேவஸ்தான இராஜகோபுர திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றது.

அத்துடன் தீர்த்தக்கேணி ஒன்றும் அமைக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது. (செ)

## வட-பிராந்திய இந்துப்பேரவை ஆதரவு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்தீவில் இலட்சக்கணக்கான உயிர்களை பலி கொண்டும் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான சொத்துக்களை நாசமாக்கியும் கொண்டிருக்கின்ற கொடிய யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட சமாதானப்பேரணிக்கு வட பிராந்திய இந்துப் போவை தனது ஆதரவை தெரிவிக்கின்றது.

மேற்கண்டவாறு நாளைய சமாதான பேரணி தொடர்பாக மேற்கண்ட அமைப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

அச்செய்தி வடபகுதி மக்கள் யுத்தத்தை விருப்புபவர்கள் அல்ல. நீதியான சமாதானத்தை விரும்புவர்களே என்பதை உலகிற்கு வெளிக்கொணரவும் தென்பகுதியிலுள்ள சமாதானத்தை நிஜமாக நேசிக்கும் நிறுவனங்களுடனும்பொதுமக்களுடனும் பிரமுகர்களுடனும்நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்தி சமாதான முயற்சிகளுக்கு மென் மேலும் பலமூட்டவும் இப் பேரணி பெருதவியாக அமையும்.

நாளுக்கு நாள் தென்பகுதியில் ''சமாதானம், யுத்தநிறுத்தம் நோர்வே அரசின் உதவியுடனான பேச்சுவார்த்தை,, என்பவற்றிற்குபௌத்த சிங்களத்தீவிரவாதிகளதுஎதிர்ப்பு வலுவடைந்து வருகின்ற இவ்வேளை நாட்டின் வடபகுதியில் சமாதானத்துக்காக ஒருமித்த குரலில் மதகுருமார் பொதுநிறுவனங்கள்,பொது மக்கள் அனைவரும் குரல் கொடுப்பது வடபகுதி மக்களது தார்மீக பலத்தை அதிரிக்கவும் அவர்களின் நியாயமான கோரிக்கைளின்பால் உலக நாடுகளின் அனுதாபம் செல்வாக்கை உயர்த்தவும் உதவிடும்.

எனவே இந்து ஆலயங்கள், இந்து நிறுவனங்கள், அறங்காவலர்கள், நிர்வாகிகள், சமயகுருமார்கள் அனைவரும் இச்சமாதானப் பேரணியில் கலந்துகொண்டு பூரண ஒத்துழைப்பு நல்குவோமாக இவ்வாறு அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## (இராசி பலன்)

24.03 2000
வெள்ளிக்கிழமை
(தமிழுக்கு பங்குனி - 11)

சதுர்த்தி காலை 12.14 வரை, விசாகம் இரவு 10.22 வரை, சித்தயோகம் இராகு காலம் பகல் 11.15 முதல் 12.45 வரை, சுபநேரம் காலை 6.45 முதல் 8.15 வரை.

**மேடம்:**
தொழில் கஸ்டம், பண முடக்கம், அலைச்சல்.

**இடபம்:**
நியாயம் கற்பித்தல், காரிய சிறப்பு, கடித உறவு.

**மிதுனம்:**
ஆதரவின்மை, சபல சிந்தை, மனச்சுமை.

**கடகம்:**
இனசனப்பகை முயற்சித் தடை, குடும்பகலகம்.

**சிங்கம்:**
தொழில்வெற்றி, திருமணச் சிறப்பு, குதூகலம்.

**கன்னி:**
கயவர் தொல்லை, ஆதாயக்குறைவு, வெளியார் அறிவுரை.

**துலாம்:**
முயற்சி பாலிதம், தானம் வழங்கல், வெகுமதி.

**விருச்சிகம்:**
பயனற்ற பயணம், கடன் பகை, வெறுப்பு,

**தனுசு:**
மிதவாதப்போக்கு, புத்திரர்கவலை, மனவெறுப்பு.

**மகரம்:**
பொதுப்பணி, தொழில் முயற்சி, ஞானநிலை.

**கும்பம்:**
அதிகாரிகள்துயர், நண்பர் கோபம் வைத்தியச்செலவு.

**மீனம்:**
முட்டிமோதல், தொழில் நஷ்டம், காதல்தோல்வி.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

## குலுக்கல் திகதி பிற்போடல்

(சாவகச்சேரி)

லயன்ஸ் கழகத்தினரால் நாடு பூராகவும் விநியோகிக்கப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டுக்களுக்கான குலுக்கல் திகதி ஏப்ரல் 22 ஆக பிற்போடப்பட்டுள்ளது.

[க-21]

## இன்று பொதுக்கூட்டம்

(அரியாலை)

யாழ். உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் 2000 ஆம் ஆண்டிற்கான பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

(செ-106)


## பூங்கன்று கண்காட்சியும் விற்பனையும்

பூங்கனிச் சோலை (T. P. NO- 2976)

இயற்கை எழில் கொஞ்சும் பசுமையான காட்சிகளை கண்டு களிக்க மார்ச் 25 ஆம், 26 ஆம் திகதி அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். எல்லா வகை பூக்கன்றுகளையும், சாடிகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, முடமாவடி. பூங்கனிச் சோலை. (259)



யாழ்.மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்
சகல வர்த்தக சங்கங்களுக்கும்,
வர்த்தகர்களுக்குமான

## அன்பான வேண்டுகோள்

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவினால், நாலு அம்சக் கோரிக்கையை முன் வைத்து நடாத்தப்படும் மாபெரும் சமாதானப் பேரணிக்கு வர்த்தக சமூகத்தின் ஆதரவைத் தெரிவிக்கும் முகமாக 25-03-2000 சனிக்கிழமை யாழ். மாவட்டத்திலுள்ள சகல வர்த்தக ஸ்தாபனங்களையும் மூடி சமாதானப் பேரணியில் சகல வர்த்தக சங்கங்களும், சகல வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

யாழ்.மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்
இல 27, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். (கி/139)


## பயண அனுமதி வழங்கப்பட்டோர்.

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு இம்மாதம் 23 ஆம் திகதிவரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவுஇலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

கோப்பாய்

| | |
|---|---|
| 124048 ஏ | 133923 ஏ |
| 134090 ஏ | 134090 பி |
| 136245 ஏ | 136245 பி |
| 136245 சி | 136249 ஏ |
| 136258 ஏ | 136258 பி |
| 136260 ஏ | 136260 பி |
| 136260 சி | 136276 ஏ |
| 136420 ஏ | 136424 ஏ |
| 136424 பி | 136457 ஏ |
| 136457 பி | 136458 ஏ |
| 136461 ஏ | 136479 ஏ |
| 136479 பி | 136479 சி |
| 136487 ஏ | 136487 பி |
| 136497 ஏ | 136497 பி |
| 136497 சி | 136499 ஏ |
| 136501 ஏ | 136714 ஏ |

உடுவில்

| | |
|---|---|
| 136301 ஏ | 136330 ஏ |
| 136348 ஏ | 136348 பி |
| 136353 ஏ | 136353 பி |
| 136353 சி | 139827 ஏ |

## நூலகர் போட்டிப் பரீட்சை

(கல்வியங்காடு)

அரச நூலகங்களில் பணிபுரியும் நூலகர்களுக்கான தரம் III.II இல் சேர்த்துக் கொள்வதற்கான தெரிவுப் போட்டிப் பரீட்சை நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக பரீட்சைப் பகுதி அறிவித்துள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றுவோருக்குரிய அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்பட்டு விட்டதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

(க-54)

## விபரங்களைத் தரவும்

(கோப்பாய்)

கல்விஉயர்கல்வி அமைச்சும் மாகாண கல்வி அமைச்சும் திணைக்களமும் இடைவில கல் மாணவர்களுடைய விபரங்களைத் திரட்டித் தரும்படி வேண்டுகோள் விடுத்துள்ளது. அதற்கேற்ப பாடசாலையில் இருந்து 1999 ஆம் ஆண்டுவெளியேறிய மாணவர் விபரங்களையும், புதிய ஆண்டிலே 2000 வருகைதந்துள்ள மாணவர் விபரங்களையும் எந்த பாடசாலையிலிருந்து வந்துள்ளார் என்பதையும் குறிப்பிட்டு எதிர்வரும்31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி பணியை நிறைவேற்ற உதவிகளை நல்குமாறு உதவிக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(க-79)


யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

## சகல வர்த்தகர்களுக்குமான அன்பான வேண்டுகோள்

தற்போது நடைபெற்றுவரும் யுத்தத்தின் கொடூரத் தன்மையையும், அதனால் தமிழ் மக்களும், யாழ். வர்த்தக சமூகமும் பெரிதும் பாதிக்கப்படுகின்றது என்பதனை தென்னிலங்கை மக்களுக்கும், வெளிநாடுகளுக்கும் தெரியப்படுத்துவது யாழ். வர்த்தகர்களின் தார்மீக கடமை. ஆகவே 25-03-2000 சனிக்கிழமை யாழ். நகரில் நடைபெறவிருக்கும் மாபெரும் சமாதானப் பேரணிக்கு எமது ஆதரவை வழங்க வேண்டுமெனவும், அன்றைய தினம் 25 - 03 - 2000 சனிக்கிழமை சகல வர்த்தக ஸ்தாபனங்களையும் மூடி சமாதான முயற்சிக்கான ஆதரவுப் பேரணியில் சகலவர்த்தகர்களும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இல-27, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
[கி/140]

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

## போலி நியமன மோசடி: காதல் ஜோடி தற்கொலை முயற்சி

(கண்டி)

சுகாதார சேவை திணைக்களப் பணிப்பாளரின் போலிக் கையெழுத்திட்டு வைத்தியசாலைகளில் சிற்றூழியர் நியமனம் பெற்றுக்கொடுத்த காதல் ஜோடி ஒன்று குட்டு அம்பலமானதால் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்டி ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய இந்த ஜோடி 27 பேருக்கு இத்தகைய போலி நியமனங்களை வழங்கியதாகவும் இவ் விடயம் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து பதவி நீக்கம் செய்யப்பட்டதாகவும் பின்னர் தலைமறைவாகிவிட்டதாகவும் கூறப்பட்டது.

மாத்தளையில் விடுதியொன்றில் சில தினங்கள் தங்கியிருந்த இந்த ஜோடி அங்கிருந்த மேசையொன்றில் ''நாங்கள் உலகிலிருந்து விடைபெறுகிறோம்'' என்று கடிதம் எழுதிவைத்துவிட்டு விஷமருந்தை அருந்தி ரந்தனிகல நீர்த்தேக்கத்தில் பாய்ந்து தற்கொலை செய்துகொள்ள முயன்றபோது காப்பாற்றப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

(சி)

### நாட்டில் தொடரும் யுத்தத்தில்

# யாழ். குடாநாட்டின் செயற்பாடுகள் பெருமளவு ஸ்தம்பித நிலையில்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

நாட்டில் தொடர்ந்து வரும் யுத்தம் காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் விவசாயம், கடற்றொழில், கைத்தொழில்கள், கல்வி, அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் பாதிக்கப்பட்டு விட்டன. பெரும் துன்பங்களுடனும், கடங்கஷ்ளுடன் இங்குள்ள மக்கள் தமது வாழ்க்கைப் பயணத்தைக் கொண்டு நடாத்தி வருகின்றனர். பொருளாதார வளங்களும் குன்றிய நிலையிலேயுள்ளன. இந்த நிலையில் தொடர்கின்ற யுத்தத்தினை நிறுத்தி சமாதானசகவாழ்வை யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவச் செய்ய பிரிட்டன், அவுஸ்திரேலியா, நெதர்லாந்து நாடுகள திடகாத்திரமானபங்களிப்பை ஆற்ற வேண்டும். என யாழ். குடாநாட்டு மக்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் நேற்றைய தினம் காலை அரச செயலகத்தில் நடைபெற்ற பிரிட்டிஷ், அவுஸ்திரேலியா நாடுகளின் தூதுவர்களும் நிதி வழங்கும் அமைப்புகளின் அதிகாரிகளும் கலந்து கொண்ட சந்திப்பின் போது தெரிவித்தார்.

இச்சந்திப்பில் பிரிட்டிஷ உயர் ஸ்தானிகர் செல்வி. லிண்டா டபீல்ட், முதலாவது செயலாளர் திரு. மார்டின் டௌசன், அவுஸ்திரேலிய பிரதி உயர் ஸ்தானிகர் செல்வி. காதி குலுக்மன், அவுஸ்திரேலிய உதவித்திட்டத்தின் திட்ட அதிகாரி திரு.றக்சன் றட்ணம், நெதர்லாந்து தூதுவராலயத்தின் முதலாவது செயலாளர் திருமதி. ஜெனிவான் கிறிம்பென், யு எஸ் எயிட் உதவித் திட்டத்தின் முகாமையாளர் திரு. மார்க்டிசில்வா, ஐக்கியநாடுகள் அமைப்பின் மனிதநேய ஆலோசகர் திரு.பற்றிக்வன்டென்புருண், மற்றும் உலக உணவுத் திட்டத்தைச் சேர்ந்த திரு. புருஸ் கிரெளசோ, திருமதி. செல்வி. சச்சிதானந்தன் ஆகியோர் பங்கு கொண்டிருந்தனர்.

மேலும் இச் சந்திப்பின் போது யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஸ்ணசாமி, விவசாயப் பணிப்பாளர் திரு. கே. சின்னத்துரை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இயக்குநர் டாக்டர் செல்வி. கனகரத்தினம், மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம், மேலதிக கல்விப்பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம் பிள்ளை, கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எஸ். சுந்தரேசன். வடக்கு - கிழக்கு மாகாண சபையின் ஆளுநரின் பிராந்திய ஆணையாளர் ஏ. சி. செபநாயகம் உட்பட செயலக உயர்மட்ட அதிகாரிகளும் பங்கு பற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்பில் பிரிட்டிஷ், அவுஸ்திரேலியா, மற்றும் நெதர்லாந்து நாடுகளினால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் ஆளுநரின் பிராந்திய ஆணையாளர் ஏ. சி. செபநாயகம் அங்கு கருத்துரையாற்றும் போது நாங்கள் இந்த மண்ணில் நிம்மதியாக வாழ வேண்டுமாயின் நடைபெற்று வரும் யுத்தம் நிறுத்தப்படல் வேண்டும். யுத்தம் நிறுத்தப்பட்டால் எல்லாவிதமான அபிவிருத்தி, புனர்வாழ்வுத் திட்டங்கள் யாவும் நல்லபடியாக நடைபெறும். எனவே இக்கட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா நாட்டில் உண்மையான சமாதானம் நிலவ வேண்டும். என்ற ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றார். எனவே இது விடயத்தில் பிரிட்டன், அவுஸ்திரேலியா, நெதர்லாந்து போன்ற நாடுகள் ஜனாதிபதியின் கையைப் பலப்படுத்தி அவரது முயற்சிக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் திரு. எஸ்.சுந்தரேசன் குறிப்பிடுகையில் மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகள் யாவும் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படுகின்ற விளை பொருட்களை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாய உபகரணங்கள் போதியளவு இல்லாமல் உள்ளன. அத்துடன் விவசாயிகளுக்குத் தேவையான உர வகைகளைக் கொண்டு வருவதற்கு கப்பல் கட்டணம் பெரும் சுமையாகவுள்ளது எனவும் கூறினார்,

அத்துடன் உள்ளூராட்சிப் பணிகள், கால்நடைப்பணிகள் மற்றும் கல்வித்துறையில் தற்போது நிலவுகின்ற குறைபாடுகள் பற்றியும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்ற நடவடிக்கைகள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும் என்றார்.

(க-77)

### சட்டபீட மாணவர் சங்கம்

## பேராசிரியர் சிவத்தம்பி உட்பட 10 பேருக்கு கௌரவ விருது

(கொழும்பு)

கொழும்புப்பல்கலைக்கழக சட்டபீட மாணவர் சங்கம் சட்டத்துறை, கலைத்துறை ஆகியவற்றில் சீரிய பங்களிப்புச் செய்த பிரமுகர்கள் பத்துப் பேருக்குகௌரவ விருது வழங்கிகௌரவிக்கவுள்ளது.

சட்டத்துறையில் அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் உட்பட ஐவர் கௌரவிக்கப்படுபர்.

கலைத்துறையில் பேராசிரியர் கா. சிவத்தம்பி உட்பட ஐவர் கௌரவிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. [சி]

## சுவீடன் குழுவினர் புதனன்று மட்டக்களப்பிற்கு நேரடி விஜயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக்கு சுவீடன் தூதுவராக உயர் மட்டக் குழு கடந்த புதன்கிழமை நண்பகல் விஜயம் செய்தது.

மட்டக்களப்பு மாவட்ட தற்போதய நிலைமைகளைக் கண்டறிய வருகை தந்த இக்குழுவில் சுவீடன் தூதராக இராஜ தந்திர விவகாரப் பொறுப்பதிகாரி யோச் மர்தன் இரண்டாவது செயலாளர் லலீன கோல்டன் ஆகியோரே விஜயம் செய்தவர்களாவர்.

சுவீடன் அரசினால் மட்டக்களப்பு மாநகரசபைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட 20 இலட்சம் ரூபா பெறுமதியான நடமாடும் நூலகவாகனத்தை மாநகர ஆணையாளர் எஸ் நவநீதனிடம் கையளித்தனர்.

மாவட்டத்தின் உயர்மட்ட அதிகாரிகளுடனும் பேச்சு நடாத்தியுள்ளனர் (க-60)

## தலையாழி வைரவர் கோயிலில் இரவுவேளை துணிகரத் திருட்டு

கொக்குவில் தலையாழி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் பங்குனி உத்தரத்தன்று இரவு பெறுமதிவாய்ந்த ஞானவைரவர் பெருமானின் அசல் வெள்ளியிலான முழு அளவு அங்கியும் மற்றும் பொருட்களும் களஞ்சியஅறையை உடைத்துத் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக ஆலய பரிபாலனசபை சார்பில் செயலாளர் திரு க. பரமசாமி யாழ். பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இவற்றின் பெறுமதி ஒன்றரை இலட்சம் ரூபா வரை கூறப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அங்கி 75 வருடகாலப் பெருமைவாய்ந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## வேலணை மருத்துவமனைக்கு இரவு வேளை மருத்துவரில்லை

### குறை நீக்கக் கோரிக்கை

(வேலணை)

வேலணை மருத்துவமனைக்கு இரவுக் கடமையில் ஈடுபட ஒரு மருத்துவர் அவசியம் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடும் நோயுற்றவர்களை யாழ்ப்பாணத்திற்கோ அல்லது ஊர்காவற்றுறைக்கோ தான் கொண்டு செல்ல வேண்டியுள்ளதெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இக்கோரிக்கையை தீவகதெற்கு சன சமூக நிலையங்களின் சம்மேளனம் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (சி)

## சிகைஒப்பனையாளர்சங்கம்வேண்டுகோள்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள மாபெரும் சமாதானப் பேரணியில் கலந்து கொள்ளும் வகையில் தமது வர்த்தக நிலையங்களை பூட்டி பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாவட்டசிகை ஒப்பனையாளர் சங்கம்தெரிவித்துள்ளது

அன்றுகாலை 9 .மணிக்குத் சகலரும் நல்லூர் ஆலய முன்றலில் ஒன்று கூடுமாறும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## சங்காபிஷேகமும் திருவூஞ்சல் விழாவும்

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான, மணவாளக் கோல தினத்தை முன்னிட்டு நேற்று முற்பகல் சகஸ்ர சங்காபிஷேகமும் பிற்பகல் 5. 00 மணிக்கு திருவூஞ்சல் விழாவும் நடைபெற்றது. (செ)

## மட்டு. மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டம் 28 இல் நிகழும்

மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய ஆண்டிற்கான முதலாவது மாவட்ட-அபிவிருத்திக் குழுக்கூட்டம் எதிர் வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலகத்தில் அஞ்சல், தொலைத் தொடர்புகள் தொடர்பு, சாதன பிரதியமைச்சரும், மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான அல் ஹாஜ் எம். எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தலைமையில் நடைபெறும்.

இவ்வாண்டு மாவட்டத்தில் நடைபெறவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மற்றும் திட்டங்களினூடாக நடைபெறவுள்ள அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான அங்கீகாரமும் அன்றைய கூட்டத்தில் பெறப்படுமெனத் தெரியவருகிறது.

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் உட்பட உயரதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(சி-60)



## தவக்கால சிந்தனை

### 17 ஆம் நாள்

கட்டுவேர் வியக்கிய கல்லே மூலைக்கல்லாய் அமைந்தது.ஆண்டவர் செயல்இது.நம் கண்ணுக்கு வியப்பே

வாழ்க்கை என்ற குறுகிய பயணத்திலே சந்திக்கின்ற மனித உள்ளங்கள் மத்தியில் புறக்கணிப்புக்கள் ஏற்கப்படாமை பலகோணங்களிலே பரிணமிக்கிறது. இறைவன் மனிதனைப்படைக்கும் போது ஆணும் பெண்ணுமாகவே அவர்களைப்படைத்தார். மனிதேனா இறைவணையே வென்றவளாய் ஆயிரம் சாதிகள்வகுத்து அவற்றிலே சமயங்களைத் தொடுத்து வாழத்துடிக்கும் உள்ளங்களை வாய் விட்டுச் சொல்ல முடியாத பேதை உள்ளங்களாய் சாதியால்சமயத்தால்,பட்டத்தால், பதவியால், பொருளால், தள்ளி வைக்கப்பட்டவர்களாய் சமுதாயத்தில் இழி நிலைப் பார்வைக்குரியோராய் மாறிவிடும் காலம் மலிந்த வேளையிலே இயேசு கூறும் செய்தி எனக்காக ''அழாதீர்கள் உங்களுக்காவும் உங்கள் பிள்ளைகளுக்காவும் 'அழுங்க, உங்கள் அக்கிரமங்களையும் ஆணவத்தையும் எண்ணி நீங்கள் மனம் வெதும்பி அழுங்கள் உங்களது அறியாத்தனத்தாலும் ஆதிக்கத்தாலும் உள்ளங்களை உண்மை அன்புடன் ஏற்றுக் கொள்ளாத நிலையை நினைத்து அழுங்கள் சிந்திப்போம் செயற்படுவோம்.

ம. மேரி. இமக்குலேற்
அச்சுவேலி

# தாய்வானில் ஜனநாயக அரசு சீனாவிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்

## -ஹொங்கொங் எக்கனமிக்ஸ் ஆருடம்

(பீக்கிங்)

தாய்வானில் உதயமாகியுள்ள ஜனநாயக அரசு, சீனாவிலும் இவ்வாறான தோர் மாற்றம் ஏற்படப் போவதற்கான சாத்தியப்பாடுகளை தோற்றுவிக்கலாமென ஹொங்கொங் எக்கனமிக்ஸ் டைம்ஸ் என்ற பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

தாய்வானில் அண்மையில் நடைபெற்ற தேர்தலில், ஜனநாயக முன்னேற்ற கட்சித்தலைவர் சென்சுய் பியன் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறித்தே மேற்படி பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

தாய்வானில் ஜனநாயக முன்னேற்றக்கட்சி இன்று பெற்றுள்ள வெற்றிநாளை சீனாவில் ஜனநாயகக்கட்சி வெற்றிபெறும் என்பதைப் புலப்படுத்துவதாகவும், சீனாவை மேலும் ஜனநாயகமயப்படுத்துவதன் மூலமே தாய்வானுடனான முக்கிய விவகாரத்திற்கு தீர்வுகாணலாம் எனவும் மேற்படி பத்திரிகையில் கருத்துவெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, புதிய தாய்வான் ஜனாதிபதிக்கும் தாய்வானிற்கும் எதிராகக்கடும் நிலைப்பாட்டினைச் சீனா எடுக்கும் பட்சத்தில், சீனா பல நன்மைகளை இழக்க வேண்டிஇருக்கும்.

இதன்காரணமாக அமெரிக்காவுடனான சீன உறவுகள் பாதிப்படைவதுடன் உலக வர்த்தக சம்மேளனத்தில் அது அங்கம்பெற முடியாத நிலை தோன்றும் எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு அரசியல்வாதி என்ற நிலையில் சென்சுய் பியன் தனது சுதந்திரச் சார்புப் போக்கினைக் கைவிட்டு யதார்த்த நிலையை உணர்ந்தவராக மாறவேண்டும் எனவும் அப்பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது, (க-9)

# பாலஸ்தீனருக்குத் தனிநாடு; காலத்தின் தேவையே என்கிறார் பாப்பரசர்

(ஜெருசலேம்)

பாலஸ்தீனர்களுக்குத் தனி நாடமைவது காலத்தின் தேவையும் இன்றியமையாத ஒன்றுமாகும் என பாப்பரசர் தனது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

பாலஸ்தீனத்திற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள இரண்டாவது ஜோன்போல். ஜேசுநாதர் பிறந்த பெத்லகேமுக்குச் சென்று இவ்வாறு பாலஸ்தீனராஜ்ஜியத்தை அங்கீகரிக்கும் வகையிலான தனது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தசாப்தங்களாக பாலஸ்தீனர்கள் அடைந்து வருகின்ற துன்பங்களை எவருமே மறக்க முடியாது.

அவர்களுக்குஇழைக்கப்படும் கொடுமைகள் உலகின் கண் முன்னே மறையாது இருக்கின்றன.

தமக்கெனத் தனிநாட்டைக் கொண்டிருக்கும் உரிமையும் அங்கு சாந்தி சமாதானம் நிலவி சகல உரிமைகளும் பெற்று பாலஸ்தீனர் வாழ வேண்டும் என்பதை வத்திக்கான் எப்போதுமே ஆதரித்து வந்திருக்கிறது எனவும் பாப்பரசர் தெரிவித்துள்ளார்.

எதிர் வரும் 26 ஆம் திகதி வரை பாப்பரசர் பாலஸ்தீனத்தில் தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப் படுகிறது. (சி-9)

# பயங்கரவாதத்தை எதிர்க்க இந்தியாவுடன் ஒத்துழைப்பு

## பில்கிளின்டன் தெரிவிப்பு

(புதுடில்லி)

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்காக நீதிமுறை ஒன்றை உருவாக்கிட இந்தியாவுடன் ஒத்துழைப்பதாக அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் உறுதியளித்துள்ளார்.

உலகின் இரு பெரும் ஜனநாயக நாடுகளான இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் மிகப்பெரும் சவாலாக பயங்கரவாதம் திகழ்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் அண்மையில் ஏற்பட்டுள்ள நிகழ்வுகள் பற்றி இந்தியாவைப் போலவே அமெரிக்காவும் கவலை கொள்கிறது என பில் கிளின்டன் தெரிவித்துள்ளதுடன் இந்தியா பாகிஸ்தானுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டும் எனவும் கூறினார்.

அத்துடன் காஷ்மீர் பிரச்சினையில் அமெரிக்கா மத்தியஸ்தம் வகிக்காது எனவும் தெரிவித்துள்ளார். (க-5)

# தேநீருக்குப் போட்டியாக குளிர்பானங்களா? மாற்ற வேண்டுமென்கிறார் மாறன்

(புதுடில்லி)

தேநீருக்குப் போட்டியாக இவ்வளவு காலமும் கோப்பி தான் இருந்து வந்தது. இப்பொழுது குளிர்பானங்கள் பலத்த போட்டிக்கு வந்துள்ளன என்று அமைச்சர் முரசொலிமாறன் தெரிவித்தார்.

புதுடில்லியில் நடைபெற்ற இந்திய தேயிலை மகாநாட்டில் மத்திய வர்த்தகதொழில் துறை அமைச்சர் முரசொலி மாறன் மேலும் பேசுகையில் தேயிலை உற்பத்தி செய்யும் கம்பனிகள் தங்களுக்குள் போட்டிகளை மறந்து மக்கள் தேநீர் அருந்தும் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார், (து-சி)

# அமெரிக்க ஏகபோகத்துக்கு வேட்டு வைக்கப்படும் நிலை வருமா?

அமெரிக்காவின் ஏகபோகத்துக்கு ஆபத்து ஏற்படும் நிலை உருவாகியுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத்தெரிவிக்கின்றனர்.

அமெரிக்கா மிக வேகமாக வளர்ந்து வருவதை யாரும் தடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அணு வல்லரசு என்ற அளவுக்கு அது வருகிறது என்று சர்வதேச மட்டத்தில் பயம் ஏற்பட்டுள்ளது.

இதே வேளை இந்தியாவும், சீனாவும்பழைய பகைமையை மறந்து நெருக்கமான பொருளாதார உறவுகளிலும் பாதுகாப்பு உறவுகளிலும் செயற்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவும், ரஷ்யாவும் மீண்டும் தத்துவார்த்த ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் செயற்படுகின்றன என்ற கருத்தினை அரசியல் நோக்கர்கள் முன் வைத்துள்ளனர்.

இந்த சூழ்நிலையில் 22 வருட இடைவெளிக்குப் பின் ஏற்பட்டுள்ள இந்திய அமெரிக்கத் தலைவர்கள் சந்திப்பு முக்கிய இடம் வகிப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

அமெரிக்கத் தலைவர் விருப்புடன் இந்தியாவிற்கு வந்ததாகக் கூறும் இவ்வேளையில் அரசியல் உள்நோக்கத்தையும் ஆதிக்கப்பலம் குறைகின்ற தன்மையையும் எடுத்துக் காட்டுவதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். (து-சி)

# ஆறுகள் பெருக்கெடுத்து மீண்டும் அனர்த்தங்கள் விளையுமா?

## மொஸாம்பிக்கில் அச்சநிலை

(மபுட்டு)

மொஸாம்பிக்கில் மீண்டும் தொடரும் பெரும் மழை காரணமாக ஆறுகள் பெருக்கெடுக்கும் அபாயம் தோன்றியுள்ளது.

இதனால் கடந்த மாதம் பெய்த மழையின் போது பேரழிவுகளுக்குக் காரணமாய் அமைந்த சிம்பாவே நதியின் நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருவதாக தொண்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

தோன்றி வரும் அபாயகரமான நிலையையடுத்து நதிக்கரையையண்டிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு அபாய முன்னெச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

எனினும் முன்பு ஏற்பட்ட வெள்ளப் பெருக்குகளின் போது இடம் பெயர்ந்த மக்கள் இன்னமும் திரும்பிவராததன் காரணமாக இம்முறை இழப்புகள் வெகு குறைவாகவே இருக்கும் என யூனிசெப் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம்,

மொஸாம்பிக்கில் பலத்த மழை பெய்தால் சிம்பாவே நதிக்கரையோரத்தில் வாழும் 100 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்படுவர் என ஐக்கியநாடுகள் சபையின் உலக உணவு அமைப்பினர் அச்சம் வெளியிட்டுள்ளனர். (சி-9)

# கடலூர் ரயில் நிலையக்குண்டு வெடிப்பு கிளின்டன் வரவுக்கு எதிர்ப்பு

(சென்னை)

கடலூர் சூரப்பநாயக்கன் ரயில் நிலையத்திற்கு அருகே நேற்று குண்டு ஒன்று வெடித்ததில் ஓடு பாதை பலத்த சேதத்துக்குள்ளாயின என்று தெரிவிக்கப்படுகின்றது.

தஞ்சாவூர் காசி ரயில்கள் அவ் வழியால் போவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னால் இக்குண்டு வெடித்தது.

ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸ் அதிகாரிகள் அமெரிக்க அதிபர் கிளிடன் வரவை எதிர்க்கும் துண்டுப்பிரசுரங்களைக் கண்டெடுத்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச் செயலை தமிழ்நாடு, விடுதலை அமைப்பு என்ற இயக்கம் செய்திருக்கலாமென்று பொலிஸ் வட்டாரங்களை, ஆதாரங் காட்டிச் செய்திகள் தெரிவிக்கின்றன. (து-சி)

## ஜம்மு- காஷ்மீர் திகில் கொலைகள்:

# ஆறுதல் கூறச்சென்ற மந்திரிகளுக்கு சீற்றமுற்ற சீக்கியர்கள் கல்வீச்சு

(புதுடில்லி)

வட இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்ட சீக்கியர்களது குடும்பத்தினர்க்கு ஆறுதல் வார்த்தை கூறச்சென்ற மாநில அமைச்சர்கள்மீது, கோபமுற்ற சீக்கிய இனத்தவர்கள் கல்வீச்சுத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

இதுபற்றித் தெரியவருவதாவது, நிகழ்ந்த கொடூரத்தின் விளைவால் சோகமே உருவாய் காணப்படும், கொலை நிகழ்ந்த கிராமமான சேட்டிசின்குராவுக்கு அமைச்சர்கள் சென்று பாதிக்கப்பட்டவர்களது குடும்பத்தினர்க்கு ஆறுதல் வார்த்தைகள் கூறப்பட வேண்டும் என கிராமத்தவர் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய அமைச்சர்கள் கொண்ட குழுவொன்று மேற்படி கிராமம் சென்று பாதிக்கப்பட்டவர்களது குடும்பங்களைச் சந்தித்து ஆறுதல் வார்த்தைகள் கூறினர்.

பின்பு, தமது கார்களில் ஏறி திரும்ப முற்பட்ட போதே ஊரவர்கள் சேர்ந்து கார்கள் மீது கற்களால் எறிந்ததாகவும், இத்தாக்குதல்களில் அமைச்சர் ஒருவரின் மெய்ப்பாதுகாவலர் மற்றும் புகைப்படக்காரர் ஒருவர் காயமுற்றிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேசமயம்,

பல்லாயிக்கணக்கான சீக்கியர்கள் ஒன்றிணைந்து, இந்தியாவில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகம் முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றினையும் நடாத்தியுள்ளனர்.

ஜம்மு காஷ்மீர் பகுதியில் இதுவரை நடைபெற்ற படுகொலைகளில் சீக்கிய இனத்தவர் கொல்லப்படுவது இதுவே முதற்தடவையென்பதும், இதுவரை கொல்லப்பட்டவர்கள் அனைவரும் இந்துக்களே என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி-9)

## செய்திக் குவியல்

★ இந்தியா மீதான ஊடுருவலை நிறுத்தும்படி ஐரோப்பிய சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது

★ நீதிமன்றத் தீர்ப்புகளினாலும் வன்முறைச் சம்பவங்களினாலும் ஜெயலலிதாவின் செல்வாக்கு குறைந்து வருகிறது.

★ சிம்பாவேயில் மீண்டும் வெள்ள அபாயம் தோன்றும்என்றுஐ. நாசபை செயலகம் அறிவித்துள்ளது.

★ நோர்வேயில் வாழும் 45 இலட்சம் மக்களுக்கு வாசிப்பதற்கு 200 பத்திரிகைகள் அங்கு வெளிவருகின்றன.

★ மலேசிய விமானத்தில் ஏற்பட்ட நச்சு வாயுக் கசிவினால் 5 தொழிலாளர்கள் மயக்கமடைந்தனர்

★ நாட்டின் பொதுக் கருத்தைப் பெற்றேசி.ரி. பி.ரி.யில் இந்தியா கைச்சாத்திடும் என பிரதமர் வாஜ்பாய் தெரிவிக்கிறார்.

★ நேபாளத்தின் புதிய மந்திரி சபையில் 25 பேர் மந்திரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

(து)

## உலக தரிசனம்

# சிங்கத்தின் பிடியில் சிக்கிய யுவதி காயங்களுடன் தப்பினார்

மெக்ஸிக்கோவில், தனது கைத்தொலைபேசியை மீட்க முற்பட்ட இளம்பெண்ணொருத்தி சிங்கத்தின் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கிறாள்.

மெக்ஸிக்கோவின் பக்சிக்கான் நகர மிருகக்காட்சிச் சாலையில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தனது சகோதரருடனும் நண்பியுடனும் மிருகக்காட்சிச் சாலையைப் பார்வையிடச் சென்றவருடைய கைத்தொலைபேசி சிங்கத்தின் கூண்டில் வீழ்ந்துவிட்டது.

சிங்கம் அறியாவண்ணம் தனது கைத்தொலைபேசியை எடுக்க முட்பட்டவேளை, அதன் மணி ஒலித்தது. இச்சத்தத்தினைக் கேட்டுச் சீற்றம் கொண்ட சிங்கம் பெண்ணைத் தாக்கத்தொடங்கியது.

தெய்வாதீனமாக உயிர் தப்பிய பெண், மார்பிலும் வயிற்றிலும் காயமுற்ற நிலையில் மிருகக் காட்சிச்சாலைக் காவலர்களால் மீட்கப்பட்டார். (சி-9)

# பொதுஅறிவுவினாக்கள்

இல 06 (தொகுப்பு:- யூட்)

**கீழ்வருவனவற்றைக் கண்டு பிடித்தோர் யார்?**

(1) சுருக்கெழுத்துமுறை ......................
(2) இரிடியம் ........................
(3) விசர்நாய் கடி மருந்து ........................
(4) தட்டச்சு இயந்திரம் ........................
(5) தையல்மெசின் ........................

**பின்வரும் நாடுகளின் தலை நகரங்கள் எவை?**

(6) நோர்வே ........................
(7) போலந்து ........................
(8) எகிப்து ........................
(9) சுவீடன் ........................
(10) கிறீஸ் ........................

**பின்வரும் நாடுகளின் நாணய அலகுகள் எவை?**

(11) போத்துக்கல் ........................
(12) துருக்கி ........................
(13) சோமாலி ........................
(14) ஈரான் ........................
(15) அவுஸ்திரியா ........................

**ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட பின்வரும் தினங்களிற்கான நாட்கள் எவை?**

(16) உலக தொழிலாளர் தினம் ........................
(17) உலக பொருள்தர நிர்ணய தினம் ........................
(18) ஐக்கியநாடுகள் சபை நாள் ........................
(19) உலக உடல் ஊனமுற்றோர் தினம் ........................
(20) மனித உரிமைகள் தினம் ........................
(21) மூன்று நூற்றாண்டுகள் வாழ்ந்து தற்போது கின்னசில்இடம் பிடித்திருக்கும் பெண்மணி யார்? ........................
(22) ஏழு பேருடன் புறப்பட்டு 72 செக்கனில் வெடித்து சிதறிய அமெரிக்க விண்கலத்தின்பெயர்என்ன? ........................
(23) ஈரான் ஈராக் போர் எத்தனையாம் ஆண்டு இடம் பெற்றது? ........................
(24) அண்மைக் காலங்களில் தபால் முத்திரைகளை வடிவமைத்த பிரபல ஓவியர் யார்? ........................
(25) ஹைடிஜன் பலூனைக் கண்டுபிடித்த நாடு எது கண்டு பிடித்தவர் யார்? ........................
(26) கருணைக்கொலை செய்ய முதலில் அனுமதி வழங்கிய நாடு எது?
(27) உலகிலே அதிகமான பஞ்சு விளையும் நாடு எது? ........................
(28) முதன் முதலில் லைவ் டெலிவிசனை ஒலி பரப்பிய நாடு எது? ........................
(29) உலகிலே அதிகளவு நாளிதழ் வெளிவரும் நாடு எது? ........................
(30) எரிமலைகள் அதிகம் உள்ள நாடு எது? ........................
(31) சிசிலிநாட்டின் தற்போதய அதிபர்யார்? ........................
(32) வீரமாமுனிவர் என்று அழைக்கப்படுபவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? ........................
(33) பசை தடவிய தபால்தலையைக் கண்டுபிடித்தவர் யார்? ........................
(34) எம். சீ. சி. என்னும் குறியீட்டின் பெயர் என்ன? ........................
(35) துருக்கி நாட்டின் தேசிய விளையாட்டு எது? ........................
(36) உப்பு செறிவு கூடிய கடல் எது? ........................
(37) சர்வதேச தகவல் தொடர்பு கழகம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது? ........................
(38) விண்வெளியைக் சுற்றிவந்த முதல் செயற்கைக் கோள் எது? ........................
(39) ஐரோப்பாவின் மிகப் பெரிய நதி எது? ........................
(40) கனடாவின் புதிய தேசிய கொடியில் காணப்படும் சின்னம் எது? ........................

குறிப்பு:-

இதற்கான விடைகளை 30-03-2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## அறிவியல் பகுதி வினா இல. 06

"வலம்புரி"
இல. 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

முழுப்பெயர்:- ........................

சொந்த முகவரி:- ........................

கையொப்பம்:- ........................

இப்படிவத்தைப் பூரணப்படுத்தி உங்கள் விடையுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

பாதாள உலகக் கைதிகள்

# சகல வசதிகளுடன் சிறைகளில்

# கவனிப்பாரற்ற நிலையில் தமிழர்

(கொழும்பு)

''பாதாள உலகக் கைதிகள் சிறைச்சாலைகளில் சகல வசதிகளுடனும் வாழும் போது பயங்கர வாதத் தடைச் சட்டத்தின் கீழும் அவசர காலச் சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டு எவ்வித விசாரணையுமின்றி சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளுக்குத் தடுப்புக் காவல் சிறையில் எந்த வசதிகளும் செய்து கொடுக்காமல் வைத்திருக்கக் காரணம் என்ன? அவர்கள் தமிழர்கள் என்பதால? மனிதாபி மானத்துடன் அவர்களது பிரச்சினை அணுகப்பட வேண்டும்''

இவ்வாறு வன்னி மாவட்ட எம். பி. அடைக்கலநாதன் (செல்வம்) தெரிவித்துள்ளார்.

''மேற்படி தமிழர்களை விசாரணை செய்ய விஷேட பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். சில காரணங்களைக் கூறி விசாரணைகளைத் தாமதிக்காது வீணாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் விசாரணைகளைத் துரிதப் படுத்தி அவர்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.'' என்றும் அவர் கூறியுள்ளார். (சி)

★ பேராதனைப்பல்கலைக்கழகத்தில்

## மீண்டும் பகிடிவதை எதிரொலி கர்ப்பிணி மாணவி வைத்தியசாலையில்!

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற பகிடி வதைகாரணமாக கர்ப்பிணிக் கலைப்பீடமாணவி உட்பட பலர் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புதிய கல்வியாண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இது வரை ஆறு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கலைப்பீட மாணவியான கர்ப்பிணிப் பெண் ஒருவர் கலைப்பீடத்திற்கு அருகில் உள்ள பஸ் நிலையத்தில் வைத்து பகிடி வதைக்குள்ளாக்கப்பட்டதால் அவரது நிலைமை மோசமடைந்து முதலில் கண்டி வைத்தியசாலையிலும், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக ராகம வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டார்.

மேலும் மூவர் மலசலகூட கொம்மோட்டுக்குள் மூழ்கடிக்கப்பட்டு வதைக்குள்ளாக்கப்பட்டதால் கண்டி, மற்றும் மருத்துவப்பீட வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவங்கள் தொடர்பாக மாணவர் ஒழுக்காற்று சபை விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக சபையின் தலைவர் டாக்டர் ஜி. சமரசிங்க தெரிவித்துள்ளார். (வ-ச)

## பொது அறிவு வினா இல. 05

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு

(01) கி. குமாரவடிவேல், சாவகச்சேரி.
(02) செ. வசந்தகுமாரி, நல்லூர்.
(03) சு. கர்ணன், எழுதுமட்டுவாழ்.
(04) ர. மயூதரன், மயிலிட்டி.
(05) சி. சயந்தன், வட்டுக்கோட்டை.
(06) வே. தேவஞானேஸ்வரன், மிருசுவில்.
(07) ந. கோசலா, ஒட்டுமடம்.
(08) இ. தேவன், கோண்டாவில்.
(09) வ. வாசுகி, கொக்குவில்.
(10) தெ. யாழினி, வேலணை.
(11) அ. ரமணன், நெடுந்தீவு.
(12) க, சுபாஜினி, நல்லூர்.
(13) ந. சுதர்சனா, ஆனைக்கோட்டை.
(14) த. வாகீசன், மானிப்பாய்.
(15) த. வனிதா, உரும்பிராய்.
(16) ச. லக்ஸ்மன், ஏழாலை.
(17) உ. கோகுலன், ஊர்காவற்றுறை.
(18) அ. அச்சுதன், பளை.
(19) ப. கஜந்தன், சாவகச்சேரி.
(20) இ. நிலானி, மட்டுவில்.
(21) அ. மீரா, பண்டத்தரிப்பு.
(22) க. மாலினி, வண்ணார்பண்ணை.
(23) ச. சாந்தினி, சுன்னாகம்.
(24) வே. வேந்தன், கல்வியங்காடு.
(25) ப. சுரேந்தினி. மிருசுவில்.
(26) ச. சுகிர்தா, உசன்.
(27) த. வானதி, கொழும்புத்துறை.
(28) பொ. ஐங்கரன், சில்லாலை.
(29) அ. பிரதீபன், ஒட்டுமடம்.
(30) அ. வேனிலா, குருநகர்.
(31) தெ. அருளமுதன், ஆனைப்பந்தி.
(32) சு. சுபாஷினி, கொடிகாமம்.

## பொது அறிவு வினா இல. 05இற்கான விடைகள்

1) உப்பபீலஸ்லோ தேசியபூங்கா (கனடா)
2) மெக்சிக்கோ வளைகுடா 3) இந்தியா 4) பிறேசில்
5) பாங் ஓவ் அமெரிக்கா 6) லிஸ்பன் 7) ஜகார்த்தா
8) மொகாடிஷு 9) டமஸ்காஸ் 10) சியால்
11) மே 8 12) யூலை 8 13) ஒக்ரோபர் 17
14) டிசம்பர் 1 15) ஒக்ரோபர் 3 16) புண்டஸ்டாக்
17) கவுஸ் ஓவ் அசெம்பிளி 18) பெடரஸ் அசெம்பிளி
19) அல்திங்க் 20) மக்கள்சபை 21) 1957ல்
22) சுற்றுச் சூழல் மாசடைவதைத் தடுத்தல்
23) இந்தோனேசியா 24) நோர்வே
25) மென்ரி சோரி அம்மை
26) கி.மு 132ம் ஆண்டு சாங்ஹெங் 27) தென் அமெரிக்கா
28) 13 வரிகள் 29) தாய்லாந்து
30) மென்ட் கெய்பியா சகோதரர்கள் 31) நெப்போலியன்
32 புலிட்ஸர் பரிசு 33) கால்மாக்ஸ்
34) ரோமானியர்கள் 35) 1972
36) ஆர்தர் வைன்-அமெரிக்கா 37) மலேசியா
38) சாமுவேல் ஜோன்சன்
39) Light Amplification Stimulated Emission or Radiation
40) வெப்பத்தை

## தொடர் குண்டுச் சத்தங்கள்

(ஈச்சமோட்டை)

நேற்றுமுன்தினம்இரவு8.30 தொடக்கம் 9 மணி வரை வளன்புரம் மற்றும் கொழும்புத்துறையை அண்டிய பகுதிகளில் துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் குண்டுத்தாக்குதல் சத்தங்கள் தொடர்ச்சியாக கேட்ட வண்ணமிருந்தன.

இதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் பதட்டமடைந்து காணப்பட்டனர்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேலதிக விபரங்களைப் பெறமுடியவில்லை. (க-59)

## 29 ஆம்திகதிவரை விளக்க மறியல்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த 17 வயது யுவதி மீது பாலியல் பலாத்காரம் புரிய முற்பட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞரை 29ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் ஆர். ரி. விக்கினராஜா உத்தரவிட்டுள்ளார்.

கல்வியங்காட்டைச்சேர்ந்த த. பாஸ்கரன் என்பவரே விளக்க மறியலில் வைக்கப்பட்டவராவார். (க03)

## 38 கிலோ போதைவஸ்து கைப்பற்றப்பட்டது

(சிலாபம்)

சிலாபத்தில் 38கிலோ போதைவஸ்து பொலிசாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த போதைவஸ்து தூத்துக்குடியூடாக இந்தியாவிற்கு கடத்தப்பட இருந்த போதே கைப்பற்றப் பட்டதாகத் தெரியவருகிறது.

இச்சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதனோடு சம்பந்தப்பட்ட மற்றும் இருவர் தப்பிவிட்டனர். (வ)

## அக்கினிப் பெருமூச்சு

(அரியாலை)

தே. தேவானந்தின் நெறியாள்கையில் உருவான 'அக்கினிப் பெருமூச்சு' நாடகம் எதிர்வரும் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மேடை ஏறவுள்ளது. (க-106,27)

# பீ. சி. ஜி. தடைமருந்து ஏற்றுவதன் மூலம்

# காசநோயை நாம் எளிதில் தடுக்கலாம்

சர்வதேச காசநோய் தினம் இன்றாகும் அதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

(ஆ - ர்)

காசநோயை உண்டாக்குவது மைகரோபகரீரியம் ரியூபக்குளோசிஸ் என்னும் பக்ரீரியா ஆகும். இதில் பல வகைகள் உண்டு. எனினும் மனித காச நோயே முக்கியமானது. இலங்கையில் மாடுகளில் இந்நோய் ஒழிக்சப்பட்டுவிட்டது, எனினும் இது சம்பந்தமாக விளிப்பாக இருத்தல் வேண்டும்.

நோய் தொற்றியுள்ள ஒருவரின் உடலில் இந்த பக்ரீடீரியா வழக்கமாக நுரையீரலிலேயே காணப்படும், இதனால் இது பாதிப்பு அடைகிறது. எலும்புகள் மூளை பலோப்பியன் குழாய்கள் ''வளஸ்டிடிகறன்ஸ்'' சிறுநீரகங்கள், முள்ளந்தண்டு மற்றும் மூளை, நுரையீரல் என்பனவும் அவற்றைச் சூழவுள்ள மென்சவ்வுகளும் பொதுவாக இந்நோயால் பாதிக்கப்படும் உறுப்புகளாகும்,

(T.B MENENZITIS) என்றும் நுரையீரலைச் சுற்றியுள்ள மென்சவ்வு பாதிக்கப்படும் போது இதை புளறைரி (PLOURITIS) என்று மருத்துவ ரீதியாக நோய் நிர்ணயம் செய்யப்படுகிறது. சில வேளை நுரையீரலைச்சுற்றி நீர் சேர்ந்து விடும்போது PLOURAL EFFUSIOR கூறப்படும்.

சுவாசத் தொகுதியுடன் சம்பந்தப்பட்ட காசரோகத்தின் அறிகுறிகளாக மூன்று கிழமைகளுக்கு மேற்பட்ட தொடர்ச்சியான இருமல் காய்ச்சல் சிறிய களைப்பு சளியில் இரத்தம் காணப்படல் நிறைகுறைவு, நெஞ்சுநோ சில வேளைகளில் இழுப்பு, காலப்போக்கில் சளியில் அதிக இரத்தம், பேச்சுக்கரகரப்பு வயிற்றுநோ கட்டுக்கடங்காதவயிற்றோட்டம் ஆகியன காணப்படும்,

சுவாசத் தொகுதியைத் தாக்கும் காசநோய் தான் மிகவும் பொதுவாகக் காணப்படுகிறது. இந்நோய் பரவும் முறை நோய் நிர்ணயம் ஆகியவை பற்றிக் கவனிப்போம்.

ஒரு சுசதேகி ஒரு காச நோய் தொற்றியுள்ள ஒரு நோயாளியுடன் நெருக்கமாகப் பழகுவதால் தொற்று ஏற்படுகிறது.

ஒரு காச நோயாளி இருமும் போது அவர் ஆயிரக்கணக்கான காச நோய் பக்டீரியாக்களை காற்றில் தெளிக்கிறார். அவருக்கு அண்மையில் உள்ள ஒருவர் பீசீஜீ தடை மருந்து மூலம் பாதுகாப்புப்பெறாத இடத்து 100 வீதம் நோய் தொற்றக் கூடிய சந்தர்ப்பம் உண்டு. இவருக்குக் காச நோய் மூன்று மாதத்தில் உண்டாகும், அல்லது சீவியகாலத்தில் வரலாம் இது தான் இந்நோயின் ஆபத்தான தன்மை ஒருவருக்கு அடிக்கடி இருமல் காணப்பட்டால் அண்மையில் உள்ள அரசாங்க மத்திய மருந்தகம், மருந்தகமும் மகப்பேற்றுமனையும், சுற்றயற் கூறு, மாவட்ட வைத்திய சாலை போன்ற வைத்திய நிலையத்திற்குச் செல்லவேண்டும். அங்கு சேவை செய்யும் வைத்தியர்கள் நோயாளிகளின் சளியைச் சேகரித்து நோயை இனங்காண உரிய நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் நோயாளரை நேரகாலத்துடன் இனம் காணப்பட்டு மக்களும் சமூகமும் காப்பாற்றப்படலாம். இதன் மூலம் வருடாவருடம் கணிசமான அளவு நோயாளர் தொகையைக் குறைக்கலாம்.

துரதிர்ஸ்ட வசமாக 50% மான நோயாளர் நிறை குறைவு சளியில் இரத்தம் ஆகிய நாட்பட்ட அறிகுறிகளுடனேயே மார்பு நோய் சிகிச்சை நிலையத்துக்கு அல்லது போதனா வைத்திய சாலைக்கு வருகிறார்கள் அல்லது அனுப்பப் படுகிறார்கள்.

இவர்கள் நகரத்துக்கு வரும் நீண்ட பயணத்தின் போது நெருக்கமான பஸ்பிரயாணத்தின் போதும் வெளிநோயாளர் பிரிவிலும் இந்நோயை பலருக்கு பரப்ப வழியுண்டு ஆகையால் மூன்று கிழமைகளுக்கு மேல் அடிக்கடி இருமல் காணப்படும் ஒருவர் அண்மையில் உள்ள அரசாங்க வைத்திய நிலையங்களில் ஆரம்ப சுகாதார கவனிப்புப் பெற்ற நோய் நிர்ணயமும் சிகிச்சையும்பெறவழி உண்டு. இந்நோய் சிறிது சிறிதாகவே ஒருவரைத் தாக்கும். இதனால் ஒருவரும் மருத்துவ சிகிச்சைக்குச் செல்வதில்லை.

இதற்கான சிகிச்சை மார்பு நோய் சிகிச்சை நிலையம் யாழ்ப்பாணத்திலும், சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலையிலும் அளிக்கப்படுகின்றது. சிகிச்சை ஆறு மாத காலத்துக் கொடுக்கப்படுகின்றது. ஆயினும் முதல் இரண்டு மாதங்களும் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற வேண்டும். இதன் மூலம் நோயாளி மருந்துகளில் ஏற்படும் தாக்கங்கள் பற்றி அவதானிக்கப்படுகின்றார். சலரோகம், ஆஸ்துமா நோயாளர்கள் விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டியவர்கள்.

ஒரு புகைப்பிடிப்பவர் சிகிச்சைக் காலத்தில்ஒழுங்குக்குக் கொண்டுவரப்படுகின்றார். சளி, எச்சில் உரிய முறையில் சேகரித்தல், அழித்தல் பற்றிய பயிற்சி வைத்திய சாலையில் கொடுக்கப்படுகின்றது. கண்டபடி உமிழும் பழக்கத்தை இயல்பாகவே நோயாளி கைவிடுகின்றார். இந்த நோயாளர் வீடு திரும்பியதும் சமூகத்தில் உள்ள ஆரம்ப அறிகுறிகள் உள்ள நோயாளரை இனங்காணவும், சிகிச்சைக்காகவும் மார்பு நோய் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வருகின்றனர்.

1951 ஆண்டுக்கு முன்காச நோய்க்கு உரியசரியான மருந்துகள் இருக்கவில்லை. புரதச் சத்து அதிகம் உள்ள உணவு வகைகள் பரிந்துரைக்கப்பட்டன இதன் மூலம் நோய்கட்டுப்பாட்டுக்கு வரும் என்ற நம்பிக்கை ஏற்பட்டு இருந்தது 30% மானோர் உயிர்பிழைத்தனர்.

இப்போது இந்நோய் வந்தவர்களில் 98 வீதம் மானோர் குணமடைகின்றனர். ரியுபக்கின் பசிலசுக்கு எதிராக தற்போது அதிசக்திவாய்ந்த மருந்துகள் இருப்பது தான் இதற்கு காரணம் இந்நோய் உள்ளவர்கள் அதிகளவு மாமிசபுரதம். உண்ணவேண்டியது அவசியமில்லை சைவ உணவு உண்ணும் ஒருவர் மேலதிக விசேட உணவு எதனையும் உண்ணவேண்டிய அவசியமில்லை. அவரது வழமையான உணவே போதுமானதாகும் எனினும் ஒழுங்காக மருந்துகள் உள்ளெடுப்பதே மிகவும் முக்கியமானதாகும்

1951ஆம் ஆண்டிற்குப் பின் அதிசத்தி வாய்ந்த மருந்துகள் காணப்பட்ட போதும் நோயாளர்கள் தொடர்ச்சியான சிகிச்சை முறையினை பின்பற்றாமையினால் . இன் நோய்க்கிருமிகள் மருந்துகளுக்கு எதிராக இசைவாக்கம் பெறுகின்ற தன்மையை அதிகரிக்கவும் மேலும் விலை உயர்ந்ததும் பக்கவிளைவுகளை அதிகளவில் ஏற்படுத்தக் கூடியதுமான மருந்து வகைகளைப் பாவிக்கவேண்டிய தேவை உண்டாவது உலகளாவிய ரீதியில் தவிர்க்கப்பட முடியாத பெரும் பிரச்சினையாக உருவெடுத்து வருகின்றது.

**வைத்திய கலாநிதி**
**செல்வி உமா சிவபாதசுந்தரம்**
மாகாணப் பிரதிப் பணிப்பாளர்
சுகாதாரத்திணைக்களம் யாழ்ப்பாணம்.

---

## அரச அலுவலகப் பணியாளர்

# பதவிஉயர்வு குறித்த நேர்முகப்பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

வடக்கு-கிழக்கு மாகாணத்திற்குட்பட்ட அரச திணைக்களங்களில் பணிபுரியும் அலுவலக ஊழியர்கள் அலுவலக பணியாளர் சேவைதரம் 1க்கு பதவி உயர்வதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அலுவலக பணியாளர் சேவைதரம் 1ல் பின்வரும் பதவிகள் மட்டுமே வெற்றிடமாக இருப்பதால் இவற்றில் ஏதாவது ஒன்றிற்கு மட்டுமே விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

தொலைபேசி இயக்குநர், பதிவேட்டுக் காப்பாளர், புத்தகம் கட்டுநர், றோணியோ இயக்குநர் ஆகிய இப்பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் அலுவலக பணியாளர் சேவை தரம் IIல் 9 வருடகால சேவையைப் பூர்த்தி செய்திருப்பதுடன் 1.1.2000 ஆம் ஆண்டில் 5 ஆண்டு திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்துள்ள ஊழியர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் யாவும் ஏப்ரல் மாதம் 10 ம் திகதிக்கு முன்னர் வடக்கு - கிழக்கு மாகாண பொதுநிர்வாக அமைச்சுக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப்பதவிக்கான வெற்றிடங்கள் யாவும் திருகோணமலை மாவட்டத்தில் காணப்படுவதால் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அப்பிரதேசத்தில் உள்ள திணைக்களங்களில் காணப்படும் வெற்றிடங்களுக்கே பதவி உயர்வு வழங்கப் படுமென்று விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமான சுற்று நிருபம் வடக்கு- கிழக்கு மாகாணத்திலுள்ள சகல அமைச்சின் செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் பிரதேச்ச செயலர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (க-120)

## நடமாடும் வைத்தியசேவை

(மந்திகை)

சுகாதார வசதி குறைந்த இடங்களுக்கு உடனடியாக நடமாடும் சிகிச்சை வழங்கும் திட்டத்தினை மலேரியா தடுப்புப் பிரிவினர் ஆரம்பித்துள்ளார்.

இத்திட்டம் வடமராட்சி கிழக்கின் குடத்தனை, நாகர் கோயில், தரவை ஆகிய இடங்களிலும், துன்னாலை குடவத்தை ஆகிய இடங்களிலும் இன்று வெள்ளிக்கிழமை நடைமுறைப் படுத்தப் படவுள்ளது.

இவ்விடங்களில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள சேவை மூலம் நோயாளிகளிக்கு இரத்தப் பரிசோதனை உடனடியாக நடத்தப்பட்டு சிகிச்சைவழங்கப்படவுள்ளது.

மலேரியாவினால் பாதிக்கப்பட்டவர்கள் மேற்படி இடங்களில் இன்று சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளுமாறு துன்னாலை பிரதேச பொது சுகாதாரப் பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார். (23)

## இன்று பொதுக் கூட்டம்

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி விவசாயிகள் சம்மேளன வருடாந்தப் பொதுக்கூட்டம் 24ஆம் திகதி இன்று வெள்ளிக்கிழமை பி.ப.3.00மணியளவில் வெள்ளெருவைப்பிள்ளையார் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சம்மேளனத்தின் எதிர்காலத்திட்டங்கள் பற்றிய கலந்துரையாடல் நடப்பு வருட அங்கத்தவர் தெரிவும்இடம் பெறவுள்ளதாக சம்மேளனத்தின் செயலாளர் வ.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (க-79)

## இன்று திருக்கல்யாணம்

(புலோலி)

தென் புலோலியூர் சின்னத்தாய் பிள்ளையார் கோவில் திருக்கல்யாணம் இன்று நடைபெறவுள்ளது.

புராண படனப் படிப்பு பூர்த்தியடைந்ததையடுத்து இன்று இந்நிகழ்வு இடம் பெறவுள்ளது. (க)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட, பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டும் போட்டி, கடந்த 17 ஆம், 18- ஆம் திகதிகளில் காரைநகர் தியாகராஜா மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இவ்விளையாட்டுப் போட்டிக்கு வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (க)

★ ★ ★

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக் கிழமை பி. ப. 1. 15 மணிக்கு, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை கலந்து கொள்கிறார். (செ-21)

★ ★ ★

(கல்வியங்காடு)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட, பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி இன்றுநடைபெறவுள்ளது.

இப போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் கலந்துகொள்கிறார். (செ-54)

## யாழ். இந்துவில்

(யாழ்ப்பாணம்)

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 00மணிக்கு நடைபெறவுள்ள யாழ்.இந்துக்கல்லூரியின் கூடைப் பந்தாட்ட ஆடுகளத்திறப்பு நிகழ்வின் பிரதம விருந்தினராக தற்போது யாழ்.விஜயம் மேற்கொண்டுள்ள செல்வி விண்டாஜோய் டபீல்ட் கலந்து கொள்வார். (சி)

## சான்றிதழ் வழங்கல்

யாழ் அத்தியார் இந்துக்கல்லூரியில் கடந்த வருடம் நடைபெற்ற, முறைசாராக் கல்விப் பிரிவின் தொழிற்திறன் பயிற்சி நெறியில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கல் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 3.00மணிக்கு மேற்படி கல்லூரியில் நடைபெறவுள்ளது. செ-109

## தடுப்பூசி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடும் இடங்கள் பற்றிய விபரம் பற்றி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது.

இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் 12.30 மணி வரை நல்லூர் நாவலர் கலாசார மண்டபம், பிற்பகல் 2.00 மணி முதல் 4.30 மணி வரை ஆத்திசூடி சனசமூக நிலையம், 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் 12.30 மணி வரை நாவாந்துறை சென், நீக்கிலாஸ்சனசமூக நிலையம் பிற்பகல் 2.00 மணி முதல் 4.30 மணிவரை நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் இரண்டாம் கட்டை. [சி]

செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே உட்பகை உற்ற குடி

- குறள்

வலம்புரி

## அணி திரள்வோம்

சமாதான ஆற்றுகை மேடைக்கு அணிதிரள்வோம். இது இன்று எல்லாத் திசைகளிலிருந்தும் திரண்டெழும் கூற்று. இலங்கையில் சமாதானம் என்பது சாமானியமான தன்று. வருந்திப் பெற வேண்டியதாகும். காரணம் வரண்டுபோன வரட்டு வேதாந்திகள் ஏராளம். அவர்களின் ஈன உணர்வுகள் கலைந்து போக லேசர் சிகிச்சை கொடுக்கத்தான் வேண்டும்.

உணர்வுமிக்க அமைப்புக்கள் நாற்பது ஒன்று கூடி சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவாய் உழைப்பது உள்ளத்துக்கு ஆறுதல் அளிக்கிறது. அந்த அமைப்புக்கள் கூடி எடுக்கப் போகும் பேரணி அங்கு ஒலிக்கப் போகும் காலத்தின் தேவைக்குரிய கருத்துக்கள் வரட்டு வேதாந்திகளுக்கு லேசர் சிகிச்சையாகட்டும். வாழ்வியலுக்கு வழிகாட்டியாகவும் அமையட்டும் சமாதானம் மலர ஒரு கையினை உதவட்டும்.

மதம் அபினியாக அல்லாமல் மக்கள் நல் வாழ்வுக்காய் பரிணமித்த பண்டைய நாட்கள் போல் இன்றும் என்றும் நின்று நிலவ மத தலைமைப் பீடங்கள் அணிதிரளட்டும். அந்த நல்லெண்ணத்தோடும் உந்துதலோடும் அவர்கள் ஆத்மார்த்த பேருழைப்பு பேறு பெறட்டும்.

ஒரே குரலில் வேண்டி நின்றால் சமாதானம் என்ன மலராமலா போய் விடும். தன்னல மற்ற மக்கட் தொண்டர்கள் புனிதப் பணி பூக்காமலா போகும். எதிர் பார்ப்புகள் அற்ற இதய எழுச்சி வாழ்வை மலரச் செய்வதில் தடையேதும் இருக்காது.

இங்கு ஒன்றுமட்டுச் சிந்திக்க வேண்டும் ஒருங்கு சேரும் அமைப்புகள் காத்திரமான பணிகளை ஏற்றெடுத்துச் செல்ல வேண்டும். கடந்த காலங்களிலும் அவர்தம் பணி சிறந்திருக்க வேண்டும் அங்குதான் குரலின் வலிமை தொனிக்கும்.

தெற்கிலே ஓரிருவர் கொண்ட அமைப்புக்கள் கூட வரட்டுக் கூக்குரல் எழுப்பியது யதார்த்த உண்மை. நன்மை செய்யப்பிறந்தவர்கள் நன்மை செய்யா விட்டாலும் தீமையாவது செய்யாதிருக்கட்டும். இந்த ஒன்றே இன்றைக்கு வேண்டும்.

- அன்புடன் ஆசிரியர்

# இயந்திரவியல் கற்கைநெறி; திடீர் முட்டுக்கட்டையால் மாணவர் பாதிப்பு

### நிலைமாற அழுத்தம்தேவையென வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். இணைப்பு நிலையத்தினால் இந்த ஆண்டு முதன் முறையாக இயந்திரவியல் கற்கை நெறி ஒன்று ஆரம்பிக்கப்பட இருந்தபோதிலும். இறுதி நேரத்தில் நாவலவில் உள்ள திறந்த பல்கலைக்கழக நிர்வாகத்தின் இம்முயற்சிக்குத் தடையாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது இம்முறை இக் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது யாழ்.மாணவர்கள் பலரும் விண்ணப்பித்திருந்தனர். பல்கலைக்கழக நிர்வாகத்தினரும் முதலில் யாழ்ப்பாணத்தில் இக் கற்கை நெறியை கொழும்பு அளவில் நடாத்த இணங்கியபோதும் பின்னர் செய்முறை வசதிகள் இங்கு இல்லையெனப்பின்னடித்தனர்.

எனினும் ஆரம்ப கட்டங்களில் பயில்பவர்களுக்கு செய்முறை அற்ற பாடங்களைத் தெரிவு செய்யலாம் என யாழ்.பிராந்திய இயக்குநர் ச.ஞானேந்திரன் நேற்று தெரிவித்தார்.

ஆயினும் நேற்று நண்பகல் யாழ்.பிராந்திய இயக்குநருடன் தொடர்பு கொண்ட திறந்த பல்கலைக்கழக நிர்வாகம் இங்கு மேற்படி கற்கைநெறியை நடத்த அனுமதிப்பதுசாத்தியமில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இக்கற்கை நெறியைப்பயில்வதற்காக கொழும்பு செல்லமுடியாத மாணவர்கள் ஏமாற்றமடையக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதுடன் இக்கற்கைநெறி இங்கு தொடரப்படுவதற்காக சகல தரப்பினரும் அழுத்தம் கொடுக்க வேண்டுமென மாணவர்கள் வலியுறுத்துகின்றனர். (3-சி)

## சமாதானப் பேரணிக்கு வர்த்தக சங்க சம்மேளனம் ஆதரவு

நோர்வே நாட்டின் சமாதான முயற்சியும், அதற்குத் தென் மாகாணத்தில் எழுந்துள்ள எதிர்ப்புப் பற்றியும் சடந்த கிழமை வெளியான செய்திகள் தென்மாகாண மக்களுக்கு இங்கு நடைபெறும் யுத்தத்தின் கொடூரம் என்ன என்பதை புரியாத நிலையில் உள்ளதை அவதானிக்க முடிகிறது. ஆகவே எமதுநிலைப்பாட்டைத் தென்மாகாண மக்களுக்கும் வெளி நாடுகளுக்கும் தெரியப்படுத்துவது எமது தார்மீகக் கடமை என்பதால் சமாதானத்திற்கும், நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவினால் எமக்கு அறிவிக்கப்பட்ட நாலு அம்சக் கோரிக்கையை முன்வைத்து நடாத்தப்படும் சமாதான முயற்சிக்கான ஆதரவுப் பேரணிக்கு வர்த்தக சமூகத்தின் ஆதரவும் ஒத்துழைப்பும் முக்கியமென நாம் கருதுவதால் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல வர்த்தக சங்கங்களும் தங்களின் எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களையும் 25-03-2000 சனிக்கிழமை மூடி இச் சமாதான முயற்சிக்கான ஆதரவுப் பேரணிக்கு தங்களின் ஆதரவைத் தெரிவிப்பதுடன், இச் சமாதானத்திற்கான பேரணியில் சகல வர்த்தகர்களையும் பங்குபற்றுமாறும் யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் விடுத்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

### நல்லூர் பி. செ. பிரிவிற்குட்பட்ட

## வி. கழகங்களுக்கிடையிலான எல்லே, கபடி போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்

நல்லூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற எல்லே சுற்றுப் போட்டியில் K C C C விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடிய அரியாலை விளையாட்டுக் கழகம் 3 புள்ளிகளாலும் 1 இன்னிங்சாலும் வெற்றிபெற்று மாவட்ட மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பெண்களுக்கான எல்லே சுற்றுப்போட்டியில் K C C.C அணி 2 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

ஆண்களுக்கான கபடிச் சுற்றுப் போட்டியில் K C C C அணி 2-ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (செ)

### 1971, 76 காலப் பகுதியில்

## நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கு சார்பாக உயர்நீதி மன்றம் தீர்ப்பு

### சம்பள நிலுவையும் வழங்க பணிப்பு

(மானிப்பாய்)

பட்டதாரிப் பயிற்சித் திட்டத்தின் கீழ் 1971, 1976 ம் ஆண்டு காலபபகுதியில் நியமனம் பெற்ற அரச ஊழியர்களின் வழக்கில் சுப்பிரீம் கோட் சாதகமான தீர்வினை வழங்கியுள்ளது.

இது விடயம் பற்றி பட்டதாரிப் பயிற்சித் திட்டத்தின் கீழ் 1971 க்கும் 1976 க்கும் இடையில் நியமனம் பெற்ற அரச அலுவலர் சங்கம் (வடக்கு - கிழக்கு மாகாணம்) தெரிவிக்கையில் மேற்படி பயிற்சித் திட்டத்தின் கீழ் நியமனம் பெற்ற அரச ஊழியர்களில் குறிப்பிடத்தக்க தொகையினர் பாரபட்சமாக நடத்தப்பட்டனர். ஒரு பகுதியினர் மாத்திரம் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்களாக உயர்ந்த வேதனத்துடன் பதவி உயர்த்தப்பட்டு அகில இலங்கை சேவைக்கும் உள்ளீர்க்கப்பட்டார்கள்.

தாபனப் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 2/97 (III) இல பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்களின் வேதனம் மேலும் அதிகரிக்கப்பட்டது. ஏனையவர்களுக்கு இச்சலுகை வழங்கப்படவில்லை.

பாரபட்சம் தொடர்ந்தும் அதிகரித்துச் சென்ற நிலையில் மேற்படி சங்கம் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குதாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ் வழக்கை ஏற்றுக் கொண்ட நீதியரசர் இது சம்பந்தமான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குப்படி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரைப் பணித்திருந்தார்.

இதற்கமைய கடந்த பெப்ரவரி 27ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை இடம் பெற்ற போது பொது நிர்வாக அமைச்சின் மேலதிகச் செயலாளர் சமூகமளித்திருந்தார் விசாரணையின் போது அவர் 2/97 (III) இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையினால் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட வேதன உயர்வை ஏனையவர்களுக்கும் யூன் மாதம் 99 ம் ஆண்டு தொடக்கம் வழங்குவதற்கு ஒப்புக்கொண்டதுடன் இதற்கான பொது நிர்வாக சுற்று நிருபம் விரைவில் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-120)

## யாழ் வாலிபரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த குருநாதன் பிரபாகரன் (வயது 23) என்ற, கச்சேரி கட்டடப்பகுதியில் கடமையாற்றும் இளைஞரை கடந்த புதன்கிழமை முதல் காணவில்லை என அவரின் உறவினர்களால் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். கிளையில் முறையிடப்பட்டுள்ளது.

[சி-3]

## பணம் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வீதியில் கடந்த சனிக்கிழமை ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரத்துடன் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்தோணிப்பிள்ளை 'இல, 50' மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறுதெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### இடம் பெயர்ந்தோரிற்கான

## புனர்வாழ்வுத் திட்டங்கள் ஆரம்பம் சர்வதேச நிறுவனங்கள் உதவி

சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன், யுத்தம் காரணமாக இடம்பெயர்ந் தோரிற்கான பாரிய புனர்வாழ்வுத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

கடந்தகாலங்களில் இடம் பெற்ற யுத்தங்கள் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, புத்தளம், அநுராதபுரம், திருகோணமலை முதலிய இடங்களில் வசித்துவரும் குடும்பங்களுக்காகவே இப்பாரிய புனர்வாழ்வுத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி பிரதேசங்களில் சுமார் 1300 இடம்பெயர்ந்த குடும்பங்கள் வசிப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

புனர்வாழ்வுத்திட்டங்களுக்கென ஐரோப்பிய ஆணைக்குழு 6 கோடி 30 இலட்சம் ரூபாவை ஒதுக்கி இருப்பதாகவும் கெயர் சர்வதேச நிறுவனமும் பல திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் புனரமைப்பு அதிகார சபையின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளனார்.

இதேசமயம்,

இந்நாட்டு ஜனாதிபதியிடமும் அரசாங்கத்திடமும் கொண்டிருக்கும் நம்பிக்கை காரணமாகவே சர்வதேச நிறுவனங்கள் இவ்வாறான திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதாக வடமத்திய மாகாண முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (க-9)

## (வெள்ளிநற்சிந்தனை)

### உலகில் சிறந்தமனிதன் யார்?

ஏழைப் பெண்ணின் திருமணத்திற்கும். அனாதைப் பிணத்தின் தகனத்திற்கும் எவன் ஒருவன் மனம் கனிந்து உதவுகிறானோ அவனே சிறந்த மனிதன்.

ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகள் உள்ளன. ஒவ்வொரு கருமத்துக்கும் உள்ளார்த்தம் உண்டு. காலையில் எழுந்தது முதல் இரவு படுக்கப்போகும் வரை செய்கின்ற கருமங்கள் ஒழுங்குமுறைகளாக நமது முன்னோர்கள் வகுத்துத் தந்திருக்கிறார்கள். அவைகளைத் தவறாது கடைப்பிடிப்பதன் மூலம் சிறந்த வாழ்க்கையை நாம் வாழ இயலும். தர்ம சாஸ்திரங்கள் எதுவும் பொய் இல்லை, அவை நிதர்சன உண்மையாகும்.

மனித வாழ்வில் நாம் எவ்வளவோ தர்மங்களைச் செய்ய இயலும். எத்தகைய நிலைமையில் இருப்பவனும் இரண்டுவித தர்மங்களுக்குக் கண்டிப்பாக உதவ வேண்டும். பெண்ணின் திருமணத்திற்குக் கோரும் உதவி, அநாதைப் பிணமாக யாரையும் விடாமல் அந்தப் பிணத்தின் தகனத்துக்கான உதவி, இந்த இரண்டும் கண்டிப்பாக எல்லோராலும் செய்யப்பட வேண்டும். இந்த இருவித தர்மங்களையும் எவன் ஒருவன் விரும்பிச் செய்கின்றானோ அவனே சிறந்த மனிதனாகக் கருதப்படத்தக்கவன்.

தினசரி கடவுளைத் தியானிப்பவர்கள், இயன்ற தருமங்களைச் செய்வது, பெரியவர்களை மதிப்பது, அனைவருடனும் அன்பாக இருப்பது ஆகிய நற்பண்புகளை வளர்த்தல் வேண்டும்,

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பரமாச்சாரிய ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளுரையிலிருந்து-

தொகுத்தவர்:- சங்கரத்தை சி. சபாநாதன்.

# யாழ்ப்பாணத்தில் நாளை இடம்பெறும் பேரணிக்கு ஐக்கிய மத அமைப்பு ஆதரவு

[கொழும்பு]

சமாதானமென்றினை நாட்டின் மக்கள் அனைவரும் எதிர் பார்த்திருக்கும் வேளையிது. அச்சமாதானமானது நீதியுடையதாகவும் நிலைத்து நிற்க்க கூடியதாகவும் மக்களின் முன்னேற்றத்திற்கானதாகவும் அமையவேண்டும்.

சமாதானத்தை விரும்பும் மக்கள் அனைவருடனும் இணைந்து எங்கள் ஆதரவை நல்குவதோடு உங்கள் முனைப்பான எழுச்சிமிகு முயற்சியையும் பாராட்டுகிறோம்.

யாழ்ப்பாணத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள சமாதானப் பேரணிக்கு ஐக்கிய மதநிலையத்தினர் அனுப்பிவைத்துள்ள ஆதரவுச்செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அச்செய்தியில் மேலும்தெரிவிக்கையில்-

சர்வமதபீடமாகிய யாம் சமூகஅமைதியையும், நல்லெண்ணத்தையும் அடைய சமய-ஒழுக்க மனித விழுமியங்களின் அடிப்படையில் முயல்வோமாக! இம்மிலேனியம் ஆண்டில் சமாதானம் மலரட்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## துப்பாக்கிச்---

யில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 1-30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் புத்தூர் வாதரவத்தையைச் சேர்ந்த பூதன் ஆனந்தன் (வயது50) என்பவரே துப்பாக்கிச் சூட்டினால் படுகாயமடைந்தவராவார். [க-7877105]

## நாவற்குழியில்---

போது காயமடைந்துள்ளார்.

செம்மணி நல்லூரைச் சேர்ந்த டேவிட் இரத்தினராசா (வயது43) என்பவருக்கு தலையிலும் கையிலும் காலிலும் பலத்த காயமடைந்து கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## இடையில்---

தின் போது அவ்வீதியால் வந்து கொண்டிருந்த யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் முதலாம் வருட மாணவன் கோபாலசிங்கம் கணேஸ்(வயது24) அரியாலை என்பவர் மார்பில் சூடுபட்ட நிலையில் மரணமானார்,

இவரது சடலம் தற்போது யாழ். போதனாவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் வேலை செய்த இவர் அண்மையிலேயே யாழ்ப்பாணம் வந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் குறித்து பலாலி இராணுவப்படைப் பிரிவு விடுத்த செய்தியில் நேற்று மாலை அரியாலை கனகரட்ணம் வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது பதுங்கியிருந்த விடுதலைப் புலிகள் தாக்கியதில் படைவீரர் ஒரு ஒருவர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டதாகவும், அவ்வீதியால் மாணவர்கள் சென்றுகொண்டிருந்தமையால் இராணுவத்தினர் பதில் தாக்குதலை மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (105-ா)

ஸ்ரீ செல்வா
யாழ். ஸ்ரான்லி வீதி,
காலை 10-30 பி.ப 2.30
பார்த்திபன்
நடித்த
சாக்கைச் சிறகினிலே
குடும்பச் சித்திரம்
நேரடி CD
(புதிய வெளியீடு)
(00115)

## உடற் பயிற்சி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி எதிர்வரும் 2000-03-25ஆம் திகதி நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெறும்

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக கோட்டக் கல்வி அதிகாரி திரு.க.அரசரத்தினம் அவர்கள் கலந்து கொள்வார். (வ-82)

## கிளிங்டன்---

ஹரேந்திர கொரயா கூறினார்.

''இந்தியாவுடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டு நல்லுறவை ஏற்படுத்தியது இலங்கையே. அதற்கு வழி சமைத்தது ஐ.தே.அரசாங்கமேயாகும்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

## வடபகுதி---

படையினர் மறித்து திருப்பியனுப்பியுள்ளனர்.

இத்தகைய நடவடிக்கை இப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் மனப்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவரும் வட்டுக்கோட்டை ஈ.பி.டி.பியின் அமைப்பாளருமான என் திரிலோக நாதன் வடபகுதிக் கடற்படைத் தளபதிக்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் தெரிவித்துள்ளார்,

இது போன்ற விரும்பத்தகாத நடவடிக்கைகளைத் தாங்கள் உடன் தலையிட்டு நிறுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் அக்கடிதத்தில் கேட்டுள்ளார். (ந)

## எமது---

நாளைகாலை9.30மணிக்கு நடைபெறவுள்ள சமாதானப் பேரணியில் கலந்துகொள்வதற்காக நல்லூர் கந்தசாமி கோவிலில் அணிதிரண்டு ஊர்வலமாக வந்து உரிய அதிகாரிகளுக்கு எமது கோரிக்கை அடங்கிய மகஜரைக் கையளித்து இதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவோம்.

நாளை சகல வர்த்தக நிறுவனங்களையும் மூடி இப்பேரணிக்கு நல்லாதரவினையும், ஒத்துழைப்பையும் வழங்க வேண்டுமெனவும் கடற்றொழில் பெருமக்கள் தமதுபூரண ஆதரவை நல்கும் முகமாக பெருமளவில் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கின்றோம் என்றும் தெரிவித்துள்ளது.

நடைபெறவுள்ள சமாதானப் பேரணியில் கடற்றொழிலாளர்கள் கலந்து கொள்ள வகை செய்யும் வகையில் அன்றைய தினம் கடற்றொழிலுக்குப் போவதை நிறுத்தி அனைவரையும் ஊர்வலத்தில் பங்குபற்றவருமாறு கேட்டுக்கொள்கிறோம். (வ)

# இயந்திரம் பொருத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மூளை நரம்பு சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு தேவையான பாரிய யந்திர சாதனமொன்று கொழும்பில் இருந்து நேற்று முன்தினம் எடுத்து வரப்பட்டுள்ளது.

மூளைநரம்பு சத்திர சிகிச்சைப் பிரிவுக்குப் பொறுப்பான மூளை நரம்பு சத்திர சிகிச்சைப்பிரிவு நிபுணர் வைத்திய கலாநிதி குணானந்தன் மேற்பார்வையில் இந்த யந்திர சாதனம் பொருத்தப்பட்டு வருகின்றது. இதனைப் பொருத்துவதற்கு கொழும்பில் இருந்து பொறியியலாளர் ஒருவர் வந்துள்ளார். (வ-105)

# குடிநீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் தொழில் நுட்ப ஒத்துழைப்பு நிறுவனத்தின் அனுசரணையுடன் புனரமைக்கப்பட்டுவரும் யாழ் நகர குடிநீர் விநியோகத் திட்டத்தின் பிரதான தாங்கி இன்று 24 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு குடிநீர் விநியோகம் மக்களின் பாவனைக்கு ஆரம்பித்து வைக்கப்படும்.

நாளாந்தம் காலை 6.00 மணி 7.00 மணி வரையும் மாலை 5.30 மணி 6.30 மணி வரையும் விநியேககம் தொடர்ந்து நடைபெறும். (க)

## மரத்தால்---

பெற்றது.

நயினர்தீவைச் சேர்ந்த சங்கரதாஸ் வாமதாஸ் (13 வயது) என்ற மாணவனே இவ்வாறு பரிதாபகரமாக மரணமடைந்தவராவார். (78 ந)

## இருவர்---

சிகளான் திருவேணி சுந்தரஜன், 40ஆம் கொலனியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுதேந்திரன் ஆகியோரின் மரண விசாரணையின் போது இவர்களைப் படையினர் கைது செய்து கொண்டு சென்றதாக உறவினர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (சி)

## நாளைய---

நல்லூர் கந்தன் ஆலயமுன்றலில் இருந்து நாளை காலை 9.30மணிக்கு சமாதானப் பேரணிஆரம்பமாகி கோவில் வீதியூடாகச்சென்று பிரதான வீதியில் திரும்பி. பிரதான வீதியூடாகச் சென்று துரையப்பா விளையாட்டு அரங்கை சென்றடைந்துஅங்கு பொதுக் கூட்டம் நடத்தஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடாநாட்டின் சகலபகுதிகளிலும் இருந்து ஊர்வலத்தில் பங்குபற்றுபவர்களுக்கு வசதியாக சகல இடங்களுக்கும் பஸ் போக்குவரத்து ஏளபாடுகள்செய்யப்பட்டுள்ளற்ாகவும் தெரிவிக்கப்பட்டுள்தது (வ)

## கத்தியுடன்---

நாரந்தனை தெற்கில் வசிக்கும் என். ரஜீவன் என்னும் 6 வயதுப் பாலகனே நேற்று முன்தினம் இவ்வாறு கத்தி வெட்டுக்கு இலக்கானவர் ஆகும்.

இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது; வீட்டில் இருந்த கத்தி ஒன்றை எடுத்துக் கொண்டு ஓடிய இச்சிறுவன் கால் தடுக்கி கீழே விழுந்ததினால் கத்தி சிறுவனின் கழுத்தில் ஆழமாகப் பதிந்துவிடவே பாலகனின் தந்தை நாசுக்காக கத்தியை வெளியே இழுத்தெடுத்து விட்டு உடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகின்றது. (வ-105)

# கிளின்டனின் இந்திய விஜயம்

## கட்டுநாயக்கா விமான நிலைய சோதனை நடவடிக்கை தீவிரம்

அமெரிக்க ஜனாதிபதியில் கிளின்டன்இந்தியவிஜயத்தையொட்டிகட்டு நாயக்காவிமான நிலையத்திலிருந்து புதுடில்லி செல்லும் விமானப்பயணிகள் பலத்த சோதனையின் பின்னரே பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்திய உப கண்டத்தில் கிளின்டனின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம்.

என்பதால் புதுடில்லி வரும் பயணிகளையும் விமானங்களையும் தீவிர சோதனைக்குப் பின்னரே அங்கு அனுப்புமாறு இந்தியப் புலனாய்வுத் துறையினர் இலங்கை உட்பட அயல் நாடுகளுக்குக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து கட்டுநாயக்காவிமானநிலையத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

## இவற்றை --

திரிகைக்கு முதல் முறையாக பேட்டியளித்திருந்தார்.

இப் பேட்டியின் போது போர் நிறுத்தம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அவர் எடுத்து விளக்கியுள்ளார்.

அன்ரன் பாலசிங்கம் அப் பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் நோக்குடன் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள போர் நடவடிக்கைகள் தமிழ் மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையை மேலும் மோசமாக்கி பத்து இலட்சம் மக்களை அவர்களின் சொந்த மண்ணிலேயே ஏதிலிகளாக்கியுள்ளது.

தமிழ் மக்கள் மீது ஒரு கூட்டுத் தண்டனையாக விதிக்கப்பட்டிருக்கும் ஒடுக்குமுறைகளும் நெருக்குதல்களும் உடன் நீக்கப்பட வேண்டும்.

பொதிகளிலும்பெட்டகங்களிலும்அரசியலமைப்பு சீர்திருத்தங்களிலும் தமிழ் மக்களுக்கு அதிகளவு அக்கறையில்லை.

தமிழர்கள் மீது இறுக்கப்பட்டுள்ள ஒடுக்குமுறையைச் சூழ்நிலையை நீக்கி சமாதானத்திற்கும் பரஸ்பர நல்லெண்ணத்திற்குமான ஒரு இயல்பு நிலையைத் தோற்றுவிக்க அரசும் எதிர்க்கட்சியும் ஒன்று சேர்ந்து உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த ஒடுக்குமுறைகள் தடைகள் நீக்கப்படுவது அரசாங்கத்தின் போர்க் கொள்கையோடு பின்னப்பட்டிருப்பதால் ஒரு உருப்படியான போர் நிறுத்தத்திற்கும் விடுதலைப்புலிகள் தயாராகவுள்ளனர்.

பேச்சுவார்த்தைக்கு முன்னதாக போர் நிறுத்தமோ தமிழ்ப்பகுதிகளிலிருந்து இராணுவத்தை வெளியேற்றவோ ஜனாதிபதி சந்திரிகா மறுத்துள்ளார்.

பேச்சுவார்த்தை வெற்றி அளித்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டாலன்றி தமிழ்ப்பகுதிகளிலிருந்து இராணுவம் வெளியேற்றப்படமாட்டாது என்பதே அவரது நிலைப்பாடாகும்.

போர்ச்சூழலில் சமாதானப் பேச்சுகக்ளைநடாத்த விடுதலைப்புலிகள் விரும்பவில்லை போரை நடாத்திக்கொண்டு மறுபுறம்பேச்சுவார்த்தையை நடத்துவது என்பது மிகவும் அபத்தமான முட்டாள் தனமாகும்.

இனப்பிரச்சினைக்கு ஒரு சிறந்த இறுதித் தீர்வு காணும்வரை அரசு தனது படைகளைத் தமிழ்மண்ணில் வைத்திருப்பதை எதிர்க்கவில்லை. ஆனால் போரை நிறுத்திய பின்னர் படையினர் முகாமுக்குள்ளே முடக்கப்படவேண்டும்.

போர்நிறுத்தத்தின் பின்னர் படைகள் குடியிருப்புப் பகுதிகளை ஆக்கிரமித்து வைத்திருப்பதையும் நாம் விரும்பவில்லை. தமிழ் மக்களை அடிபணிய வைத்து புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு நிர்ப்பந்திக்கும் நோக்குடனேயே அரசு இராணுவ அடக்கு முறைகளையும் ஒடுக்கு முறைகளையும் எம்மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளது.

தென்னிலங்கையில் கடும் எதிர்ப்புகள் இருந்த போதும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தாம் பேசத் தயார் என்று சந்திரிகா அறிவித்து வருவதற்கு அண்மைக்காலங்களில் வன்னிப்பகுதியில் ஏற்பட்ட பாரிய இராணுவத் தோல்வியே காரணமாகும்.

இராணுவ செலவீனத்திற்கு ஏற்றவகையில் வரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கியுள்ளார்கள். ஆயுதங்களையும் கொள்வனவு செய்துள்ளார்கள்.

தற்போழுது கொழும்பில் அரங்கேறியிருக்கும் சமாதான நாடகமும்பேச்சுவார்த்தைக்கு புலிகளுக்கு விடுக்கும் அழைப்புகளும் அரசின் ஏமாற்று வித்தை என்றே கருத வேண்டியுள்ளது.

இராணுவத்தை நவீனமயப்படுத்துவதற்கு வேண்டிய கால அவகாசம் அரசிற்கு தேவையாக உள்ளது.

காலக்கெடுக்களை விதித்து இக்காலவரம்புக்குள் விடுதலைப்புலிகளை உட்படுத்தலாம் என சந்திரிகாகருதுவாரானால் அது அவருக்கு ஏமாற்றத்தையே அளிக்கக்கூடியதாக இருக்கும் அவரது கால அட்டவணைத் திட்டத்திற்குள் புலிகள் மாட்டிக் கொள்ளப்பேவதில்லை.

சந்திரிகாவின் காலவரம்புக்குள் செயற்பட வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எதுவும் புலிகளுக்கில்லை ஐ. தே. க, வும், பொ, ஐ. ஐ. மு. யும் பெரும்பான்மையின மக்களின் நலனை பேணுபவையாகவே உள்ளன.

இலங்கை இராணுவம் தற்போதுள்ள சூழ்நிலையில் களைத்து சோர்ந்து ஆட்டம் காணும் நிலையிலேயே உள்ளது.

அத்துடன் இராணுவத்தின் ஆட்பலம் குறைந்தும் அவர்களின் மனோபலம் உடைந்தும் இருப்பதனாலேயே சமாதானப் பேச்சு வார்த்தைக்கு வரவிரும்புகிறார்கள்.

தமிழ்பேசும் மக்களின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முட்டுக்கட்டையாக நின்று செயற்படும் பெரும்பான்மை இன அரசியல் கட்சிகள் இரண்டும் குற்றவாளிகளாகக் காணப்படுகின்றன. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக ஜனாதிபதி கூறிவருவது ஆசியாவில் மிகக் கடினமானதும் இரகசியமானதுமான பிரச்சினையாகும்.

## கத்திக்குத்துக்கு கிராமசேவகர் காயம்

புன்னாலைக் கட்டுவன் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கத்தி வெட்டுச் சம்பவம் ஒன்றில் அப்பகுதி கிராம உத்தியோகத்தர் ஒருவர் தலையில் படுகாயமுற்ற நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புன்னாலைக் கட்டுவன் ஜே/209 ஈவினைபகுதிகிராம சேவகரானஎன். தங்கத்துரை (வயது 50) என்பவரே மேற்படி வெட்டுக்காயத்துக்கு இலக்கானவர் ஆவார். (க-78-105)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல, 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.